www.tamilarangam.net

ஒஸ்லோ தமிழ்சங்கவிழாவில்...மல்லிகா நாகராஜா,கார்மேகம் நந்தா,சதாசிறீ



# சர்வதேசதமிழர்


தொ.3,இல.2:பாங்குனி-சித்திரை 1996 March-April:Vol.3,Nr.2:ISSN.0805-7443

தமிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை!

**Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity!**



சிங்கப்பூர் மாரியம்மன்கோவில்



மகாபலிபுரம் செதுக்கோவியம்




எக்ஸ்னோரா நிறுவனர் எம்.பி.நிர்மல்



டாக்டர் சச்சி சிறீகாந்தா,
யப்பான் இணைப்பாளர்

ஏ.யு.எல்.ஏ.ஹில்மி,தென்கொரியஇணைப்பாளர்
கொரிய பல்கலைகழக மாணவன் கிம் பியங்கூ





இ.தொ.கா.எம்பி.பி.பி.தேவராஜ்,டெல்லி இணைப்பாளர்;
கதிர்.சம்பத்குமார்;கங்கைவேணியன்,கொழும்பு இணைப்பாளர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்,ஐ.றோயலா துரொண்கைம்:த.தியாகலிங்கம் ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்;முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்:ம.பஸ்ரியன்ஏககண்ட்:பொன்.சிவா:துறம்சோ:கே.சிவராஜா: வார்டோ:

## வாசகர் கடிதம்:

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

சர்வதேசதமிழர் கண்டு மகிழ்ந்தேன். மிகவும்நன்றி!பரந்துவாழும் தமிழர்கள் மத்தியில் ஓர் ஒற்றுமையும்,புரிந்துணர்வும் ஏற்படுத்தவேண்டும்,என எண்ணுகிற உங்கள் சிந்தனைத்திறனையும்,செயலாற்றலையும் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.நாம் பெருமைப்படவேண்டியஇந்தமுயற்சியானது, விடாமுயற்சியாகத்தொடர்ந்து,தங்கள் இலட்சியம் ஈடேறவேண்டுமெனவும் நான் ஆசைப்படுகிறேன்.

சிலஇன மக்கள் தம் பாரம்பரியஅடிப்படைநெறிகளை,அவற்றின் பெருமையை சரிவரஅறிந்திராத காரணத்தால் அதை மேம்படச்செய்யும், வழிவகை தெரியாது,அந்நியக்கொள்கைகளையும்,கலாச்சாரங்களையும் பின்பற்றமுற்பட்டு,இரண்டும்கெட்டநிலையில் சீரழிந்துநிற்கின்றனர். இதை,வரலாறு உணர்த்துகிறது.

ஒரு இனத்தின் கலாச்சாரம் அதன் முதுகெலும்பாகும். அது நேரியதாய், வலுவுடையதாய் இருந்தால்தான், அந்த இனத்தின் வாழ்வு,மற்றஇனங்கள் போற்றுமளவுக்கு பொலிவுறும். ஆகவே நமது தமிழர்களின் கலாசாரத்தில்,காலத்துக்கேற்ப ஒருதிருப்புமுனையை,உருவாக்கிப் புனரமைப்புச்செய்து,அதை வலுவுடையதாக்கல் வேண்டும் என்பது என் அவா!

இந்தநோக்கில்-பிரபஞ்சமர்மம்-எனும் தலைப்பில்,விஞ்ஞானரீதியாயும்,மெய்ஞானரீதியாயும் இந்தப் பிரபஞ்சம் எனும் இயற்கையை ஆராய்ந்த என் கருத்துக்களை,தமிழர் பண்டைய கலாச்சாரங்களுடன் ஒப்புநோக்கி, ஒரு நீண்ட உரையை பகுதி,பகுதியாக பதிவுநாடாக்களில் பதிந்துள்ளேன்.அவற்றை தங்களுக்கு அனுப்புவதில் மகிழ்கிறேன்.சர்வதேச தமிழர் பலதேசதமிழருக்கும் செல்வதால், என் கருத்துகள் ஒரு சுவையான, கருத்தான விவாதத்துக்கு இட்டுச் செல்லலாம் எனக் கருதுகிறேன். தமிழர்கருத்தையும்,எதிர்பார்க்கிறேன்.

**டாக்டர். ஆ. விசாகரத்தினம்,**
**51myrna close,london SW192HN**

(இவரது உரைசுருக்கம் பிரசுரமாகும் இதுபற்றிய ஆக்கபூர்வவாதங்கள் வரவேற்கப்படும். ஆ-ர். )

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

கடந்த 50 ஆண்டுகளாக தமிழ்இலக்கியஊழியத்தில் ஈடுபட்டுள்ளேன். இருபது நூல்களின் ஆசிரியன்!எஸ்.பொ. எனவும்அழைக்கப்படுபவன்!1994ல்-பனியும் பனையும்-எனும் சிறுகதைத் தொகுதியை நண்பர் இந்திரா.பார்த்தசாரதியுடன் இணைந்து,தொகுத்து வெளியிட்டேன். கனடா,அவுஸ்ரேலியா, இங்கிலாந்து,ஒல்லாந்து,பிரான்ஸ், ஜேர்மனி,சுவிற்சலாந்து,நோர்வே, டென்மார்க் ஆகிய 9நாடுகளைச்சேர்ந்த 39ஈழத்தமிழ்எழுத்தாளர்களுடைய கதைகள் இதில் இடம்பெற்றன. நோர்வேயிலிருந்து,சந்திராதேவியின்-கலாசாரங்கள்-,தேவகி இராமநாதனின்-போயின-வ. ஐ. ச. ஜெயபாலனின் -செக்குமாடுகள்-ஆகிய 3கதைகள் வெளியாகின. இத்தொகுதி,புலம்பெயர்ந்துவாழும்,ஈழத்தமிழ்எழுத்தாளர்களுடைய இலக்கியவல்லபத்துக்கு ஓர் இலக்கியஅங்கீகாரத்தினைச் சம்பாதித்ததில் பெருவெற்றிஅடைந்துளது. 1996ல்-வேரும் வாழ்வும்-எனும்,மகுடத்திலே 2வதுதொகுதியை வெளிக்கொண்டுவரும் பணியில் ஈடுபட்டுள்ளேன். இதில் 60எழுத்தாளர்களின் 60சிறுகதைகள் தொகுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 600 பக்கங்களைக் கொண்ட-தடித்தஅட்டைநூலாக-இதுவெளிவரும். இதில் இடம்பெறத் தக்க கதைகளை எழுத்தாள நண்பர்கள் விரைவில்அனுப்பி உதவும்படி அன்பாகவேண்டுகிறேன். இந்தப்பணி குறித்து,கவனிக்க,ஏப்ரல்.15ல் அவுஸ்ரேலியாவிலிருந்து,சென்னை பயணமாகிறேன். தமிழ்இலக்கியஊழியத்தில் தங்கள் ஒத்துழைப்பு என்றும் கிட்டும்! எனும் நம்பிக்கையுடன் இதை எழுதுகிறேன்.

**என்றும் அன்புள்ள..எஸ். பொ.**
*S.Ponnuthurai,1/23 Munro street, Eastwood -2122,Australia.
Tel.02.868 2567
*MithraPubIns,375-10,Arcot road, Madras 600 024,India.

(எஸ். பொ. அவர்களை 1996 நோபல் இலக்கியபரிசுக்கும்,எஸ். தொண்டமான் அவர்களை சமாதான பரிசுக்கும் -சர்வதேசதமிழர்-பரிந்துரை செய்யும்! தமிழர்அமைப்புகளிடமிருந்து ஆதரவுக்கடிதங்கள்வரவேற்கப்படும்! ஆ.ர்)

**அன்புடன் ஆசிரியருக்கு,**

உலகமெல்லாம் பரந்துவாழும் தமிழர் செய்திகளை சர்வதேசதமிழர் மூலம் வெளிக்கொணர்ந்து,மிகவும்அத்தியாவசியமாகத்தேவைப்படும் நல்முயற்சியை உலகத்தமிழருக்குசெய்கிறீர்கள்! காலத்தால் அழிக்கமுடியாத தமிழரின் தனித்துவமான கலை,கலாசாரப்பாங்கு பரந்துபட்டுப்பட்டொளி வீச, சர்வதேச தமிழர் உதவும்!என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை!!

**ரி. சிறிகந்தராஜா-ஆசிரியர்,**
**தமிழ்ஓலைகள்-பிரித்தானிய தமிழர் தகவல் ஏடுகள்,**
**British Tamil Directories,**
52,Kingsley rd,Wimbledon,London SW19.8HF,England.
(Tel.181.543.2126 Fax.540.3442)

**அன்புடையீர்,**

வணக்கம்!நலம். நலம் மலர்க! இங்குள்ள சில நண்பர்கள் மூலம் சர்வதேசதமிழர் கிடைக்கப்பெற்று, வாசித்துமகிழ்ந்தேன்.

செய்திகள் யாவும் சிதைவின்றி,தெட்டத்தெளிவாக தொகுக்கப்பட்டு வெளியிடப்படுவது மகிழ்ச்சி! எங்கிருந்தாலும்,எப்படி வாழினும் தமிழ்வாழவேண்டும்!எனும் நோக்கில் தொண்டாற்றும்,தங்கள் மாண்பினை மனமார பாராட்டுகின்றேன்.

கவிதைக்கென,தனியாக,-அருவி-எனும் இதழை சித்திரையிலிருந்து வெளியிடஉள்ளோம். மலேசியகவிஞர்கட்கும்,வெளிநாட்டுக்கவிஞர்கட்கும் களமாக இது அமையும். சர்வதேச தமிழருடன்இதழ் பரிமாற்றமும் செய்ய விரும்புகிறோம்!உலகினைப்புரட்டியோர் புதுவாழ்வுபடைத்திட எழுதுகோல் இங்கோர்,நெம்புகோல் ஆகட்டும்!

**ஆசிரியர்: சீ. அருண், உதவிஆசிரியர்கள்: கணபதி. கணேசன், வே. சுந்தரராசு, ஏ. தேவராசன்.**
**424,Taman Sri Mahsan,72100, Bahau,Negeri Sembilan D.K Malaysia**(அருவியுடன்,சர்வதேசதமிழர் நட்புறவு,ஒத்துழைப்பு,மாற்றீடு மேற்கொள்ளும் -ஆ.ர்)

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,**

எமது மனங்கனிந்த வணக்கங்கள்! சர்வதேசதமிழர் கண்டு எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தோம். தங்கள் தமிழ்த்தொண்டுக்கு மலேசியதமிழர் சார்பில் எமது வாழ்த்துக்கள்!

இங்கு மலேசியமொழியே முதல்மொழி எனினும் தமிழுக்கும் சகஅந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது. தினமும்18மணிநேரம் வானொலிநிகழ்ச்சிகள் தமிழில் படைக்கப்படுகிறது. தமிழுக்காக,மலேசிய,சிங்கப்பூர் வானொலிகள் போட்டிபோட்டுக்கொண்டு தமிழ்நிகழ்ச்சிகளை அளிப்பது பெருமைக்குரியது! தங்கட்கு அவ்வப்போது மலேசியஇதழ்கள்,பத்திரிகைகளை அனுப்பி,சர்வதேசதமிழருடன் மாற்றீடுசெய்ய விரும்புகிறோம். தமிழர்களை முன்னேற்றம், ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் தங்கள் முயற்சிக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள் என்றும் உண்டு!

**எஸ். ராமசாமி-மலேசியா**

**பிரிட்டிஷ் குழந்தைக்கவி லக்சுமி சிறீகந்தராஜா,அமெரிக்க ஜனாதிபதிக்கு ஈழதமிழர் அவலநிலைபற்றி எழுதியகடிதத்துக்கு கிடைத்த பதில்:**

தங்கள்கடிதம்,கவிதைநூல்பரிசுக்கு நன்றி!தங்கள் தற்காலபிரச்சனைகள் பற்றியசிந்தனை,கவலைகள் எனக்கு முக்கியமானவை!உங்கள் கருத்துகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டுளது.

**பில். கிளின்ரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ.தியாகலிங்கம்:பேர்லவோக:இரா.விஜய:போட்ஸ்பியூட:க.சுரேஷ்கரன் கின்சார்விக்:பா.பாலேந்திரன்:பிறத்வோக்:எஸ்.தங்கராஜா
பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன்181.4270839;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன்181.4713060;மு.ஆறுமுகம் 181.5432126
கிருஷ்ணா வைகுந்தவாசன் 181.542 9787 செ.நாகேந்திரன் 181.5532190கனடா:பா.சிவலிங்கம்416.4497607;இ.வளர்மதி;
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.23517233161;பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்



## ஆசிரியர் கருத்து:

**தமிழர்களும் இந்தியத்தேர்தலும்!**

இந்தியத்தேர்தல் இந்தியாவில் வாழும் தமிழர்க்கு மட்டுமன்றி உலகத்தமிழர்க்கும்,குறிப்பாக ஈழத்தமிழர்க்கும் முக்கியமானதாகவே விளங்குகிறது. தமிழகத்தேர்தலில் ஊழல்சக்திகள் வீழ்ச்சிபெறவும்,செயல்திறனானநல்லாட்சி அமையவும்,மத்தியில் தமிழர்நட்புள்ள,தமிழர்பால் அன்பு,இரக்கம்,மதிப்புள்ள கட்சி அல்லது கட்சிகளின் கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியமைக்கவும் பாடுபடல் முக்கியமானவிடயம். மத்தியிலும்,தமிழகத்திலும் சக்திவாய்ந்த,அண்டைநாடுகளில் நீதி,அமைதி விரும்பும் தலைமைஇன்றேல் இந்தியாவின் பெறுமதியை அது தென்ஆசியாவில் மட்டுமன்றி உலகிலும் குறைத்து விடும்.

தமிழகத்தில் கலைஞர் தலைமையில் மூப்பனார் உட்படபலர் கூட்டணியாக சேர்ந்து போட்டியிடுவது மிகச்சிறப்பு! என உலகத்தமிழர்களால் வரவேற்கப்படுகிறது.குறிப்பாக மூப்பனார் துணிவுடன் காங்கிரசிலிருந்து ஒதுங்கி தமிழ்மாநிலகாங்கிரஸ் ஆரம்பித்தமைக்கு எமது பாராட்டுகள்!இதனால் அவர் ஒரு புதிய புரட்சியை தமிழகத்தில் செய்துள்ளார்.மூப்பனாருக்கு இந்தியஅரசுக்கே பிரதமராகும் தகுதி உள்ளது,என்பதிலும் யாருக்கும் ஐயம் இல்லை.தமிழகத்தின் முற்று முழுதான ஒற்றுமையும்,ஆதரவும் பிறமாநில கட்சிகளின் கூட்டணியும், மூப்பனாரின் நட்புறவும்,அனுபவமும், பிரதமர் பதவியை ஏன்வழங்க முடியாது?

தமிழர்க்கு கபினெட் அந்தஸ்துள்ள அமைச்சுகளை ஒதுக்காததாலும், காவேரி நீர் ஒதுக்கீடை நீதிமன்று தீர்த்தும் ஏனோ,தானோ என நரசிம்மராவ் புறக்கணித்ததாலும்,தமிழகமக்களால் வெறுக்கப்படும் சக்திகளுடன், கூட்டுறவு கொண்டதாலும் நிச்சயமாக தமது அரசியல்வியூகத்தை பிழையாக அமைத்ததாகவே இவர் கருதப்படுகிறார்.

சுப்பிரமணியசுவாமி,டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி அவர்களையும் தமிழக மக்கள் நல்லாட்சி பெற கலைஞர் கூட்டணி அணைத்தியங்கத் தவறக் கூடாது என்பதே தமிழர் அவா! வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள தமிழர் தமிழகத்தில்நலம்பெறவும்,ஈழத்தமிழர் அவலம்நீங்க மத்தியில் அனுதாபமானதலைமை வரவும் இந்தியத்தேர்தல் உதவுமாயின் அதுவே தமிழர் உலகில் முன்னேற்றம்பெற முதல் படி!!

## சிந்தனைத்தடாகம். Think Tank

இலங்கையிலுள்ள சிறுபான்மை இனத்தின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் தமிழர் தாயகமாக வடக்கு, கிழக்கு அங்கீகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் அரசியல் தீர்வுத்திட்டம் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இதன் மூலமே இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் .தேசிய அமைப்பாளர் அஜித் ரூபசிங்கா மட்டக்களப்பில் தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு வருகை தந்த அவர் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் பல்லின மக்கள் வாழக் கூடிய சமுதாயத்தைப் உருவாக்குவதும், சமானத்திற்கான சூழலை உருவாக்குவதும் எமது முக்கிய நோக்கமாகும்.

யுத்தத்தின் மூலம் ஒரு போதும் வெற்றி கிட்டாது.

இந்த நாட்டில் பதவிக்கு வந்த அரசுகள் இனவாதத்தை பேசியே ஆட்சிக்கு வந்தன. இவர்கள் இந்த நாட்டில் உரிமைகள், சலுகைகள் எல்லாம் பேரின வாதத்திற்கு ஊடாக பெரும்பான்மை இனத்திற்கு மட்டும்தான் எனச் செயற்பட்டார்கள்.

தமிழ் அரசியல் தலைவர்கள் பல தசாப்தங்களாக பாராளுமன்ற அரசியலின் ஊடாக பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று செயற்பட்டார்கள். ஆனால் அவர்கள் நம்பிக்கை தோற்கடிக்கப்பட்டது.

பதவியிலிருக்கும் கட்சி பிரச்சினையைத் தீர்க்க ஒரு அடி முன்வைத்த போதெல்லாம் பிரதான எதிர்க்கட்சி அதனை முறியடித்தது. தமிழ் மக்களின் அகிம்சை முறையில் நடாத்தப்பட்ட போராட்டங்கள் அரசின் அடக்கு முறைக்கு ஆளானது.

1972ல் குடியரசுப்பிரகடனம்,அரசியல் சீர்திருத்தம் என்பனவற்றோடு தமிழ் மக்களின் நம்பிக்கைகள் காற்றில் பறந்தன. சிறுபான்மை இனத்தைப் பேரினவாத அடக்கு முறைக்குள் வைத்திருக்க வேண்டுமென்ற முழு நோக்கமும் 1972இல் அரசியல் யாப்பு சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ் மக்கள் சுமார் 40 ஆண்டு காலம் தமது உரிமைகளுக்காக அகிம்சை வழியில் போராடித் தோற்றுப்போன நிலையிலேயே ஆயுதம் ஏந்தினார்கள். எனவே இதை சமாதான முறையில் அணுகி தீர்த்து வைப்பதே அரசின் கடமை. இரு சாராருமே சமாந்தரமான முறையில் விடயங்களை அணுகி பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்.

முதலில் அரசுதான் யுத்தத்தை நிறுத்த வேண்டும். அரசிடமிருந்துதான் சமாதானத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகள் வரவேண்டும். அரசு என்ற முறையில் ஒரு கடமைப்பாடு இருக்கிறது.

தென் இலங்கையில் பொதுவாக தமிழர்களுடன் இணைந்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற ஒருமைப்பாடு இருக்கிறது.தமிழ் மக்கள் சமத்துவத்துடன் சம உரிமை பெற்று வாழவேண்டும் என்று சிங்கள மக்கள் பலர் நினைக்கிறார்கள். தாங்கள் என்ன உரிமைகளை அனுபவிக்கிறார்களோ அவை சிறுபான்மை இனங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற உணர்வு தென்படுகிறது.

தமிழருக்குரிய பிராந்தியம் வடக்கு, கிழக்கு என்று சொல்லப்படுகின்ற நிலப்பரப்பில்தான் உள்ளது. சம காலத் தமிழ்தேசியம் என்பது பல்லாயிரக் கணக்கானோரின் இரத்தத்தினால் ஏற்படுத்தப்பட்டது. வடக்கு, கிழக்கில்தான் அரசியல், கலாசார ரீதியாக அடையாளப்படுத்தக் கூடியதாகத் தமிழர்கள் மையப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். எனவே வடக்கு, கிழக்கு நிரந்தர இணைப்பு அவசியம் என்றே கருதுகிறேன்.

உண்மையில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என எண்ணியிருந்தால் இத் திட்டத்தை விடுதலைப் புலிகளுடன் பேசி உருவாக்கியிருக்க வேண்டும். அவர்களின் சமபங்களிப்பை பெற்றிருக்க வேண்டும். THINAKARAN.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

/ஐ.ஐ.ரி. 2351365/3094 ;மாயூரம்.க.பாஸ்கரன்திருச்சி:ஜான்ராஜ்தேவர்:பேராசிரியர் இரா.இரகுபதி/பிசப் ஈபர் கலலூரி மதுரை: இரா.
இரவி:சு.இலக்குமணசுவாமி புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:இரா.ஜெயசேதுபதி;:
கதிர்.சம்பத்குமார் கேரளா: ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்,கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்;

## இலங்கை-இந்திய கண்ணோட்டம்! -பீஷ்மன்

இந்தியாவில் தேர்தல்,பலத்த ஊழல்
கள் வெளியாகிக்கொண்டிருக்கும்போ
து,விரைவாகவரவுள்ளது.ஜனநாயகம்
தன்சுதந்திரநீதிச்சேவையூடாக,ஊழ
ல்புரிந்தோரை தண்டிக்கும் என பலர்
கூறினாலும்,நடைமுறை எப்படி என்ப
தை காலம் கூறும். இலங்கையில்
பொதுவாகஅரசியல்,சமூகஅமைதி,
பயமற்றதன்மை,இனநட்புறவு,மக்கள்
திருப்தி,சுதந்திரநடமாட்டம், மிகவும்
குழம்பியநிலையில்மோசமாகிவருகிறது
இந்தியாவில் நரசிம்மராவ் தலைமையி
ல் அந்நியமுதலாளித்துவ பொருளா
தாரசக்திகள் காலூன்றி தம்பலத்தை
யும்,இந்திய முதலாளிகள் பலத்தையு
ம்,ஊழல்அரசியல்வாதிகள்,நிர்வாகிக
ள் பலத்தையும் அதிகரிக்கச் செய்ய,
வறியோர்நிலை மோசமாகியுள்ளது.
வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள பல
மக்களையும்,உரிமைகள் மறுக்கப்
படும் சிறுபான்மையரையும் இருநாடுக
ளும் முற்றுமுழுதாக கைவிட்டுவிட்டன
தமிழர்நிலை இருநாடுகளிலும் மிகமிக
மோசமடைந்துள்ளன.இந்தியாவின்
சுமார் 60மிலியன் தமிழ்மக்கள் தமது
தமிழக,இந்திய,சர்வதேசஅரசியல்,
பொருளாதாரபணிகளில் தமக்குள்ள
முக்கியபங்கையும்,பணியையும்,ஆற்ற
லையும் இன்னமும் பிரயோகிக்காமல்,
புரிந்துகொள்ளாமல்உள்ளதும்,நகை
ப்புக்குரியஅரசியல் செய்வதும் கவ
லை தருவதாக உள்ளது.

தமிழகஅரசியல்வாதிகள் வறிய,பாமர
தமிழர் நலம்பேணமறந்து,தமது
நலன்,தம்குடும்பநலம்,நண்பர்-நண்பி
யர் நலம்பேணி எதுவும் காசு!என்றநி
லைக்கு தமிழகத்தை கொண்டுவந்து
ள்ளமை அதிர்ச்சி தருவது!

இலங்கையிலுள்ள தமிழர்கள் அரசிய
ல்ரீதியில் மிகவறியநிலைக்கு வந்துள்
ளனர்.சிங்களமக்களை இனதுவேச
தகவல்தொடர்புசாதனங்களும்,புதிதா
க பெருநோக்கில் சிந்திக்காத அரசிய
ல்வாதிகள்,குறுகியநோக்குள்ள அரச
இயந்திரநிர்வாகிகள்,உலகிலேயே
மிகஒழுங்கீனமான ஆயுதப்படைகள்
என மேற்குநாட்டுப்பத்திரிகைகளால்
வர்ணிக்கப்பட்ட சிங்களபடைகள்
என்பனவும் -தமிழர்வெறுப்பு- எனும்
மாயஇருளில் மூழ்கடிக்கச்செய்துளது.
தமிழர்அரசியல்வாழ்வில் கறைபடிந்த
துரோகவரலாற்றை எழுதியசில தமிழ்
குழுக்கள் தாமும் தமிழர்பிரதிநிதிகள்
எனக்கூறிக்கொண்டு அரசுடன் -எள்
ளுடன் காயும் எலிப்புழுக்கைகள் போ
ல்-என்று மறையும் இந்தப்பனித்துளிக
ள்? என வாழும் அவலவாழ்வு மேலு
ம் தமிழர்கட்கு அவலமேற்றுகிறது.
இந்தக்குழுக்கள் தம்குழுக்களை
கலைத்துவிட்டு,தமிழர்கூட்டணியில்
கலந்துகொள்வது அல்லது வேறுநா
டுகட்கு தப்பிச்செல்வது புத்திசாலித்
தனம்!மேலும் மேலும் இலங்கைஅரசு
க்கு துணைபோவது,குட்டையை குழ
ப்புவது நல்லதல்ல!தமிழர் கூட்டணி
புதிய இளைய,படித்த தலைமைக்கு
இடமளிப்பது மிகமிக முக்கியம். குறிப்
பாக தமிழ்காங்கிரஸ்,கூட்டணியுடன்
சங்கமமாகி,பலதமிழ்இளைஞர்கட்கா
க வாதாடிவரும் துணிச்சல்வீரர்
குமார் பொன்னம்பலம் அவர்களை
தமிழர்கூட்டணியின் பிரதானதலைவர்
களில் ஒருவராக்குவது மிகமுக்கியம்.
சட்டநிபுணர்கள் மட்டுமன்றி,விஞ்ஞா
ன,சமூகவிஞ்ஞான,கலைத்துறை,விவ
சாய,பொருளாதார,கல்விநிபுணர்களு
ம் இங்குதலைமையேற்பது அவசியம்!
இலங்கை தொழிலாளர்காங்கிரஸ்,
மலையகமக்கள் முன்னணி,முஸ்லிம்
காங்கிரஸ் ஆகியன தம்தனித்துவம்
பேணும் அதேசமயம் இலங்கை
சிறுபான்மையர் அணி என தம்மை
ஒழுங்குபடுத்துவது காலத்தின் கட்
டாயம்!அன்றேல் ஒருமொழிபேசும் மக்
கள்-பிரித்தாளும்-வலையில் மாள்வர்.
தமிழர்கூட்டணி தொண்டமான்-செல்
வா-பொன்னர் ஆகியோரால் ஆரம்பிக்
கப்பட்ட ஒருவரலாறு கொண்டது.
1976 வட்டுக்கோட்டை மாநாடு,1977
தேர்தல்வெற்றி ஆகியவரலாறும் கூட்ட
ணிக்கு உண்டு.தமிழீழவிடுதலைப்புலி
களுக்கும்,கூட்டணிக்கும் தகவல்,
கருத்து பரிமாற்றம் தொடங்கப்படவே
ண்டும்.ஒருமித்த ஜனநாயககுரலாக
உலகுக்கு தமிழர்கூட்டணி விளங்க,
இராணுவதந்திரோபாயங்களை விடுத
லைப்புலிகள் மேற்கொள்ளலாம்.
எனினும் குண்டுவெடிப்புகள்,அப்பாவி
கிராமங்கள்மீது தாக்குதல் முற்றாக
தவிர்க்கப்படவேண்டும்.உலகநாடுக
ளில் தமிழர் -லொபி-முக்கியஅரசியல்
வாதிகள்,நிர்வாகிகள்,தொண்டர்
தாபனங்கள் ஆகியவற்றுக்கு உரிய
தகவல்களை அளித்து ஆதரவு திரட்
டுவது முக்கியபணியாக விளங்கவே
ண்டும்.வடகிழக்கில் தமிழர் வாழும்
இடங்களில் தமிழர்கூட்டணி கட்சியை
புனரமைப்புசெய்ய புலிகள் உதவி,தம
து பலகட்சி அமைப்புமுறைக்கு ஆதர
வை காட்டலாம்.தமிழர்கூட்டணித்
தலைவர்களில் முக்கிய புலிஆலோச
கர்கள்,உதாரணமாக டாக்டர்.அன்ர
ன் பாலசிங்கம் போன்றோரின் அரசிய
ல் துணிவு,தந்திரம்,உறுதி,பயமற்ற
தன்மை இங்கு தலைமைக்கு வலுவூ
ட்டும்.அத்துடன் சர்வதேசஅரங்கில்
தமிழீழவிடுதலைப்புலிகளுடனான பய
உணர்வு,வெறுப்பு,ஒதுக்கலை இத்த
கைய கூட்டுறவு போக்கஉதவும்.
உதாரணமாக ஐரோப்பியயூனியன்
அதிகாரியின் அண்மைய இலங்கை
விஜயமும்,அவரது அறிக்கையும்!புலிக
ளுடனான தொடர்புக்கு உதாரணம்.
வடகிழக்கில் சிங்களமக்களின் எதுவி
த தலையீடுமற்ற தமிழ்பேசும் மக்களி
ன் சமஷ்டிஆட்சிவடகிழக்குக்கு வெ
ளியே வாழும் தமிழ்பேசும்மக்கள்
கல்வி,தொழில்,மொழி,கலாசார,சமய,
சமூகரீதியானசமஉரிமையுடன்,பாதுக
ாப்பாகவாழஉத்தரவாதம்!இவையே
பிரதானநோக்கங்கள்!இந்தஅடிப்பயை
ட மனிதஉரிமை வேண்டுதலுக்கு
குறுகிய சிங்களஅரசியல்வாதிகள்
மறுத்தால் பிரபாகரனை முற்றுமுழுதா
க தலைவனாக சகலதமிழர்களும்
ஏற்றுக்கொண்டாலும் ஆச்சரியப்படுவ
தற்கில்லை.

இந்திய அரசியலில் தமிழர்கள் மிகத்
தெளிவான இருநோக்குகளை கொ
ண்டிருக்கவேண்டும்.1.தமிழகத்தில்
ஊழலற்ற,வறியவரை உயர்த்தும்
நல்லாட்சி,தமிழ்-தமிழர் வளர்ச்சி!
2.இந்திய மத்தியஅரசின் ஆட்சியில்
அதிகளவு ஆதிக்கம் பெறல் .
கலைஞர் கருணாநிதி,வீ.பீ.சிங்குடன
ான அரசில் கலைஞரின் நேரடிஆதிக்
கத்தை,இந்தியஅமைதிப்படையை
இலங்கையை விட்டுவிலகச்செய்தமை
காட்டியது.

தேசியகட்சிப்பெயர்களை கூறிக்கொ
ண்டு இலங்கை,இந்தியாவில் சிலகுறி
த்தபிரிவினர் தம்நலனைமட்டும்
புத்தியாகவளர்த்தனர்.சிறுபான்மைய
ரைஏய்த்தனர்!பிரித்தாண்டனர்!ஒதுக்
கினர்!சமயம் கிடைத்தபோது கொல்
லவும் செய்தனர். ஆனால் தமிழர்
தம்பெயரில் கட்சிகளை வைத்திருந்
தாலும்,தம்நலனை பாதுகாக்கத்
தவறினர்.மற்றவர்களின் பகடைக்காய்
ஆகினர்.இதுவே மகா தவறு!

இந்தியாவில் தற்போது அரசியல்வியூ
கத்தை தமிழர்கள் சரியாக அமைத்
துக்கொள்ளவேண்டும்.மத்தியஅரசில்
தீர்மானம் மேற்கொள்ளும் ஆதிக்கத்
தை பெற தமிழர்க்கு உரிமையும்,தகு
தியும் உண்டு.பிரதமராகவும் உரிமை
யுண்டு.தமிழகத்தைகாக்க கலைஞர்,
மூப்பனார்,எம்.எஸ்.உதயமூர்த்தி,சுப்
பிரமணியசுவாமி,கோபாலசுவாமி,மார்
க்சிஸ்ட்டுகள் மற்றும் படித்தவர்கள்,
செயல்வீரர்கள் பலருள்ளனர்.இவர்க
ள் ஈழத்தமிழர்களையும் மத்தியஅரசி
ன் துணையுடன் காக்க உதவவேண்
டும்.தமிழகத்தில் கலைஞர் கூட்டணி
க்கு ஆதரவுள்ளதாக தெரிகிறது.
அண்மைய தமிழகநிலைப்படி திமுக,
மூப்பனார்காங்கிரசுகூட்டணி சிறப்பா
ன ஆட்சிக்கு வழிவகுக்கும்!ஆனால்
ஈழத்தமிழர்க்கு உதவ,மத்தியில் கூட்
டரசை மூப்பனார்தலைமையில்கொண்
டுவருவது கலைஞருக்கு முக்கியபணி
மத்தியில் அது மிக மிக முக்கியம்!!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரஷ்யா/மாஸ்கோ: க.சபாரத்தினம்;ஆர்.சுகுமார் சவுதிஅராபியா/ அல்.கதிவ்: அ.நிக்சன் ரியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ்துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஜ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்.கணேசலிங்கம்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; பி.ஜெகதீசன்; ஜேர்மனி:க.செந்தில்;0230478452;த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்:எஸ்.அருள்

## மகாபலிபுரம் செல்வோமா?

### மாயூரம் சு.பாஸ்கரன்





பாரதத்தின் முக்கியசுற்றுலா மண்டலங்களில் ஒன்றாகத்தமிழ்நாடு திகழ்கிறது.தமிழ்நாட்டின் சுற்றுலாத்தலங்களை கடற்கரைமகிழ்விடங்கள்,வனவிலங்கு சரணாலயங்கள்,மலைநகரங்கள்,கோயில்-சிற்பம்-நினைவுச்சின்னங்கள்-கட்டிடக்கலை என பிரிக்கலாம்.இங்கு மாமல்லையின் சிறப்பைக்காண்போம்.உலகின் பலஇடங்களில் வரலாற்றுசிறப்புவாய்ந்த நினைவுச்சின்னங்களும்,கடற்கரைமகிழ்விடங்களும் உள்ளன.ஆனால் இங்குதான் இவை அருகருகே உள்ளன.மாமல்லபுரம் தற்போது மகாபலிபுரம் என அழைக்கப்படுகிறது.சென்னை திரிசூலம்-மீனம்பாக்கம் விமானநிலையமே கிட்டிய விமானநிலையமாகும்.

சென்னை-திருச்சி ரயில்பாதையில் செங்கற்பட்டு ரயில்நிலையம் அண்மையில் உள்ளது.சென்னையிலிருந்தும்,செங்கற்பட்டிலிருந்தும் பேருந்தவசதிகள் உள்ளன.நல்லசாலைகள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.தமிழ்நாடு சுற்றுலாவளர்ச்சிக் கழகமும், இந்தியசுற்றுலா வளர்ச்சிக்கழகமும் சென்னையிலிருந்து தினமும் சுற்றுலாப்பேருந்துகளை அனுப்புகின்றன.

பல்லவமாமன்னர்களின் கைவண்ணம் மிளிரும் மாமல்லபுரம் நம்நாட்டவரை மட்டுமன்றி மேல்நாட்டவரையும் வெகுவாகக்கவர்கிறது.பல்லவச்சக்கரவர்த்தி நரசிம்மவர்மனால் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் காலத்தால் அழியாதவையாகக் கம்பீரமாகக் காட்சிதருகின்றன.மாமல்லபுரத்தில் பார்க்கவேண்டியவைகளை கடற்கரைக்கோயில், செதுக்கோவியம்,குகைக்கோவில்கள் என வகைப்படுத்தலாம்.

<u>கடற்கரைக்கோயில்</u>:இதுமிகப்பழமை வாய்ந்த சிவா-விஷ்ணுகோயில்.இத்திருக்கோயிலை கடலலைகள் முத்தமிட்டபடியே இருக்கும் காட்சி,கண்கொள்ளாக்காட்சியாகும்.காணக்கண்கோடி வேண்டும்!என்பது சரிதான்.

மேற்குநோக்கியுள்ள கோயிலினுள்ளே திருமால் பள்ளிகொண்டுள்ள காட்சியும்,கிழக்குத்திசையிலுள்ள கருவறையில் லிங்கமும் காட்சிதருகின்றன.

<u>செதுக்கோவியம்</u>:மிகப்பெரிய கல்லால் செதுக்கிய ஓவியம் ஒன்று மாமல்லபுரத்துக்கு பெருமையைத்தருகிறது. இது 80அடி நீளமும்,20அடி அகலமும் கொண்டது.திமிங்கிலத்தின் வால்போன்ற நீண்டஇந்த செதுக்கோவியத்தின் பாறை,கடலைநோக்கி உள்ளது. இது குறித்து இருவேறு கருத்துகள் சொல்லப்படுகிறது. <u>அர்சுனன்தவம்:</u> எதிரிகளை வெல்வதற்காக பாசுபதாஸ்திரத்தை அடைய அர்சுனன் ஒரு காலில்நின்று,சிவனை நோக்கித்தவம் செய்ததாகவும்,அதனால் அவ்வரம் பெற்றதையுமே இது எடுத்துக்காட்டுகிறது,என்பர் சிலர்.

<u>பகீரதன் தவம்</u>:ஆகாயத்திலுள்ள கங்கையை பூமிக்கு கொண்டுவருவதற்காக பகீரதன் தவம்புரிந்ததாயும், தவம்நிறைவேறி கங்கைவேகத்துடன் பூமிக்குவர,அதன்வேகத்தைக்குறைக்குமாறு மீண்டும் சிவனிடம் அவன் இரக்க,அவர் அதனையேற்று,கங்கையை தலைமீது அமர்த்தி,அதன்வேகத்தை கட்டுப்படுத்தினார், என்பதையே இது கூறுகிறது என்பர் வேறுசிலர்.

<u>ஐந்து ரதங்கள்</u>:மாமல்லபுரத்தின் தென்கோடியில் உள்ளதே,பஞ்சபாண்டவரின் ஐந்துரதங்கள்.

<u>தர்மராஜா தேர்</u>:சிவனின் பலவகைத் தோற்றங்கள் செதுக்கப்பட்ட மோடங்கள் கொண்டது.

<u>பீமன்தேர்</u>:45அடி நீளம்,25அடி அகலம்,26அடி உயரமுள்ள இதன் 4தூண்களின் கீழ் 4சிங்கம் கொண்டது.

<u>அர்சுனன் தேர்</u>:ஐராவதத்தில் தோன்றும் இந்திரன்,கருடனில் தோன்றும் திருமால்,காளையுடன் கங்காதரர் உடன்,பின்புறம் ஒரேகல்லில் செதுக்கிய காளையும் காட்சிதருகிறது.

<u>திரௌபதி தேர்</u>:கருவறையில் துர்க்கை காட்சிதருகிறாள்.வடதிசையில் கர்ஜனைசெய்யும் சிங்கம் ஒன்றுளது.

நகுலசகாதேவர் இரதம்:இரு சிங்கங்கள் கொண்டதூண்.யானை ஒன்றும் நிற்கிறது.

<u>குகைக்கோயில்கள்</u>:

பாறையில் குடையப்பட்ட 9குகைக் கோயில்கள் இருக்கின்றன.இவற்றில் கிருஷ்ணமண்டபம்,வராகமண்டபம், மகிசாசுரமர்த்தினி மண்டபம்(ஆயுதம் தாங்கிய தேவியின் சீற்றமும்,பாயும் சிங்கமும் எருதுத்தலையுடைய அரக்கன் தோற்கும்காட்சி),திரிவிக்கிரமமண்டபம்,இராமனுசர்மண்டபம் போன்றவை பல அற்புதக்கருத்துக்களைச் சொல்கின்றன.

மாமல்லபுரத்தில் அரசுபயணிகள்விடுதியும்,கடற்கரைஓய்வில்லமும் உள்ளன தனியார்தங்குவிடுதிகளும் உள்ளன. தமிழர் திறனை விளக்கும்,பூம்புகார் கைவினைப்பொருள் விற்பனைநிலையமும்,அரசினர் சிற்பக்கலைக்கூடமும் இங்கு காணத்தகுந்தவைகளாகும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டென்மார்க்:ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: செ.ஜெயகுமார்:த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன்
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதுரன்; க.சண்முகலிங்கம் பி.ஏ.எல்.எல்.பி;மா.தேவகௌரி பி.ஏ.சிறப்பு
கைதையூரான் குமரகுருபரன் பி.காம்.;டாக்டர்.ந.வேல்முருகு யாழ்ப்பாணம்:திருமதி.பி.ஹம்சானந்தி; செ.நடராசா

## தென்கிழக்காசிய பயண அனுபவங்கள்!:
## சிங்கப்பூர், இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து.

தென்சீனக்கடலில் அமைந்துள்ள சிங்கப்பூர் தீவு-அரசு உலகின் எந்த ஒருநகருக்கும் ஒப்பானதல்ல என்பர், சாங்கி விமானநிலையம் உலகிலேயே மிகச்சிறந்ததாக கருதப்படுகிறது. மாஸ்கோ விமானநிலையத்தை சிங்கப்பூருடன் ஒப்பிடின் மிகக்குறைந்த மதிப்பெண்ணையே மாஸ்கோ பெறும். குறிப்பாக மாஸ்கோ செரமித்தியோவ் விமானநிலையத்தில் தற்காலிகமாக பலமணிநேரம் தங்கும் பயணிகளின் உணவு,தங்குவசதி,கழிப்பிடம் மற்றும் வசதிகள் உலகிலேயே மோசமானதாக தென்படுகிறது. சிங்கப்பூர் நிறுவனத்திடம் சிலவருடம் மாஸ்கோ விமானநிலைய உபசரிப்பை ஒப்படைப்பது ஒரு நல்ல ஆலோசனையாகலாம்.

குடிவரவு அதிகாரிகள் கூட சிலசெக்கன்களில் விசா முத்திரையை பொறித்து அனுப்பிவிடுகிறார்கள். ஒரு சிங்கப்பூர் தமிழர் இருந்த பீடத்தில் சென்ற எமக்கு முகமலர்வுடன் அவர் குசலம்விசாரித்தபாங்கு நன்கு பிடித்திருந்தது. அங்கு பணிபுரிவோர்சேவை பற்றிய ஆய்வுக்குரிய படிவங்களை நிரப்பி உதவினோம்.

எமதுகருத்துக்களை அறிந்து மேலும் சேவையை நன்றாக்குவதே அரசின் நோக்கமாம். இந்த கருத்துக்கணிப்பு ஆய்வுகளை இலங்கை,இந்திய மற்றும் வளரும்நாடுகள் சகலமட்டத்திலும் அரசு,தனியார்,கட்சி,பொதுஅமைப்புகளிலும் அவ்வப்போது மேற்கொள்ளல் அவசியம். மக்கள் வாழ்வை இலகுவாக்கலே இங்குநோக்கு! உதாரணமாக இலங்கையில் தமிழ்அகதிகள் படும்பாட்டை போக்க இலங்கைஅரசோ,தமிழீழவிடுதலைப்புலிகளோ அவ்போது ஆங்காங்கே கருத்துகணிப்புகளை நடாத்தலாம். தாங்கள் சரியென நினைப்பதை மக்கள்மீது திணிக்காமல் மக்களுக்கு எதுவிருப்பமோ அதனையே அமுல்படுத்தல் மக்கள் மனங்களை வெல்லமுக்கியம். அண்மையில் கனடாவில் தமிழர்மத்தியில் நடாத்தப்பட்ட கருத்துக்கணிப்பை உதாரணமாக கொள்ளலாம். மேற்குலகில் இவை தற்போது சர்வசாதாரணம். தனியார் கம்பெனி புதியபொருளை அறிமுகம் செய்வதாயினும் கூட அதன் சுவை,விலை,வடிவம்,பொதி மற்றும் பலவிடயங்களை ஆய்வுசெய்து மக்கள்விரும்பியதை அளிப்பதும் ஒருவித சனநாயக முறைதான். இது அரசியலுக்கு,முக்கியமாகபொருந்தும். சிங்கப்பூரின் ஆரம்பகாலத்திலேயே குற்றவாளிகட்கு சவுக்கடியும்,தூக்கும் இருந்ததால் தான் இங்கு குற்றங்கள் குறைவாக உள்ளதாம்.

1959 மேயில் நடந்த முதலாவது தேர்தலில் மக்கள்நடவடிக்கைகட்சி, வென்று(53வீதவாக்கு)செயல்அதிபர் லீ குவான் யு முதல்பிரதமர் ஆனார். 1990 நவம்பர் வரை முடிசூடாமன்னர் போல் தொடர்ந்து ஆட்சிபெற்றார். செயல்த்திறன்(efficiency)என்பதுதான் உலகின் மாதிரிஅரசாக,நகராகமாறிய சிங்கப்பூரின்,பிரதானசொல் (key word) ஒழுங்கீனமோ,கவலையீனமோ(lack of discipline/sloppyness)இங்கு பொறுக்கப்படமுடியாதது. தனிப்பட்டவரது நலத்தைவிட பொதுமக்களதுநலமே இங்கு முதன்மை பெறும்.

இங்கு நகர கட்டமைப்புகள் உலகிலேயே சிறப்பாக இயங்குகிறதென்பர். 48மணிநேரத்துள்ளேயே,ஏற்படும் வீதிப்பழுதுகள் திருத்தப்படவேண்டும். வாகனங்களின் அதிவேக ஓட்டலை இலக்ரோனிக் எச்சரிக்கை தடுக்கும். வீதியோரகுற்றச்செயல்கள் பொதுவாக இல்லையெனினும்,சங்கிலி அறுப்புகள் சிலபகுதிகளில் நடந்ததுண்டு. பகிரங்கமாக சுயிங்கம் சப்புதலும் தடுக்கப்பட்டுள்ளதாம்.

பிறமேற்குநாடுகளிடம் இருந்து நல்ல முன்னேற்றமானவிடயங்களை உடனடியாக பின்பற்றும்தன்மை இவர்களிடம் அதிகம். றெபின் கோ எனும் நகர வடிவமைப்பாளர்,சிங்கப்பூரை -புத்திசாலி-தீவாக்க விரும்புகிறாராம்.

உலகம்-தகவல்சமூகமாக- மாறிவருகிறது. 1998ல் சகலரும் கணனி மூலம் சர்வதேச கணனிவலையான-இன்ரர்நெற்-இல் இணைக்கப்படுவார்களாம். 500 க்கு மேற்பட்ட கப்பல்கள் வரும் சிங்கப்பூர் துறைமுகம் முதலே கணனிகளால் ஏற்றுதல்-இறக்குதல் பற்றிய திட்டமிடலை மேற்கொள்கிறது. இஙகுதான்,நமது இணைப்பாளரும், நண்பருமான குலசேகரம் இரஞ்சகுணாளன் அதிகாரியாக பணிபுரிகிறார். எமது சிங்கப்பூர் பயணத்தில் பல ஆலோசனைகள்,உதவிகள் புரிந்த அவருக்கு எம்நன்றிகள் உரித்தாகுக சிங்கப்பூர் தீவை(616ச.கிமீ)சுற்றிவர 54 சிறுதீவுகள்(10ச.கிமீ)ஆட்களின்றி உள்ளன.

பூமத்தியரேகைக்கு 128கி.மீ.வடக்கே உள்ளதால் வருடம் முழுவதும் வெப்பமான சுவாத்தியம் உண்டு. (பகலில் 30பாகை சி.யும்,இரவில் 24பாகை சி.யும் சாதாரணமான வெப்பநிலைகள்) சார்பான ஈரப்பதன் 64-96வீதம் வரை மாறுபடும். தென்மேல் பருவப்பெயர்ச்சி காற்று யூன்-செப்ரம்பர்,வடமேல்பருவ பெயர்ச்சிகாற்று டிச-மார்ச்சில் வீசும். மத்தியஐரோப்பிய நேரத்திலிருந்து,



*The Merlion – symbol of Singapore.*

7மணிகூடவாக நேரம் இங்குள்ளது. சிங்கப்பூர் மிகச்சுதந்திரமான சுங்கவிதிகள் கொண்டது. சாங்கியில் வந்திறங்கியதுமே தீர்வற்ற அங்காடிகளில் பொருட்களை வாங்கமுடியும். ஏற்றுமதிவரி இல்லை. தங்கநகைகள், தங்கம் தனிப்பட்டபாவனைக்கு மேற்படின் பதிவுசெய்யப்படவேண்டும். தங்கநகைகள் வாங்குவோர்க்கு கடைகள் 3வீத பொருள்-சேவை வரி அறவிடுகின்றன. எனினும் வெளிநாட்டவர்,வரிமீள்பெறல்பத்திரத்தை கடையில் சீல்,கையொப்பமிட்டு வாங்கி சாங்கிவிமாநிலைய கஸ்டம்ஸ் பிரிவில் நாட்டைவிட்டு புறப்படுகையில்,உறுதி செய்தபின் அந்த பத்திரத்தை கடைக்கோ அல்லது அறிந்தவர்க்கோ அனுப்பி கட்டியவரியை மீளப்பெறலாம். ஆனால் புகையிரதம்,அல்லது கப்பல் மூலம் சிங்கப்பூரை விட்டுப்புறப்படின் அந்தப்பத்திரம் சுங்கஅதிகாரிகளால் சீல் இடப்படமாட்டாது. இந்த விசித்திரமான,நியாயமற்றவிதி மாற்றப்பட வேண்டும் எனவே பலரும் கூறினர்.

பார்த்துரசிக்கவும்,விளையாடிமகிழவும் பலஉல்லாசஇடங்கள் உள. யூறோங் பறவைகள்பூங்கா(600இன,8000பறவைகள் உண்டு. காலை9-மாலை6வரை திறந்திருக்கும். கட்டணம் உண்டு) யூறோங் முதலைகள்சொர்க்கம் 2500 முதலைகளை கொண்டது. 11.45,2,4 மணிக்கு முதலையுத்தம்இடம்பெறும். சிங்கப்பூர் விலங்கியல்பூங்கா 2000 பிராணிகளைக் கொண்டது. சிறுவர்,பெரியவர் விரும்பும் இடம் இது!இங்கு நைட் சபாரியும் உண்டு. புகிற் திமா இயற்கைபாதுகாப்பிடமும்,சீன,யப்பானியபூங்காக்களும்,மண்டாய் ஓர்கிட் பூங்கா,சிங்கப்பூர் தாவரவியல்பூங்கா (52கெக்டர்),சுங்கை.புலோ இயற்கைபூங்கா,கிழக்குகரைபூங்கா என பலபூங்காக்கள் உண்டு.

தீவுகளில் செந்தோசா தீவு ஒரு சொர்க்கத்தீவு!என்றே பலர் கூறுகின்றனர். வானில் கேபிள்கார்,தரையில் பஸ்,கடலில் வள்ளம் மூலமும் இங்கு செல்லமுடியும். செந்தோசா நோக்கிய எம்பயணம் கேபிள்காரில் ஆரம்பமானது. அது,வாழ்விலேயே ஒரு மறக்கமுடியாதபயணமாக அமைந்தது (வரும்)

-என்.எஸ்.பிரபு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டக்களப்பு:கோபி.ரவி;மாத்தளை: எம்.அருளபிரகாஸ்; தவ.சஜிதரன் திருகோணமலை:மதுமாரி ,செ.கனகரத்தினம் கண்டி: எஸ்
மயில்வேந்தன்; அட்டன்:பாலா சங்குப்பிள்ளை;குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்:எஸ்கதிர்காமநாதன்:
41.12724336; இரா. கலாதரன்;அமெரிக்கா: செ.பாஸ்கரன்: அவுஸ்திரேலியா:பத்மா ஞானப்பிரகாசம்தென்கொரியா:ஏ.பு.எல்.ஏ.ஹில்மி

## சர்வதேசத் தமிழர் இதழ் ஆய்வு

—பொள்ளாச்சி நசன்—

**தமிழர்களுக்கான முன்னேற்றம், ஐக்கியம்கருதி, நார்வேயிலிருந்து வெளியாகும் தமிழ்ச்சஞ்சிகை, என்.எஸ்.பிரபு அவர்களை ஆசிரியராகக் கொண்டு, 1994 ஜன—மார்ச்சு ல் முதல் இதழ் தொடங்கப்பட்டு, 1995 டிசம்பர் வரை 19 இதழ்களை வெளியிட்டுள்ளது. இந்தப் பத்தொன்பது இதழ்களின் அடிப்படையிலேயே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.**

பல்வேறுநாடுகளில் வாழும் தமிழர்களின் வாழ்க்கைமுறை, கருத்துப் பரிமாற்றம், நட்பு, தொடர்புகளை வலுப்படுத்துதல், உபயோகமான தகவல்களை அளித்தல் — எனத் தொடங்கப்பட்ட இவ்விதழ் தனது நோக்கில் வெற்றியடைந்தாகவே கருதலாம். பலருக்கும் இலவசமாகவே அனுப்பப்படும் இவ்விதழ், பல்வேறுநாடுகளில் வாழும் தமிழர்களின் கடிதவழி, அந்நாடுகளில் வாழும் அவர்களது நிலைகளைப்பற்றி அறிய அவர்களுக்கிடையிலான தொடர்பைவலுப்படுத்தப் பேருதவி செய்கிறது. மிகத்தரமான எழுத்தாளர்களது படைப்புகளை மட்டுமே வெளியிடுவது என்று 'பரவலைச் சுருக்கிக்கொள்ளாமல்', ஓவியங்கள், புகைப்படங்கள், உரைவீச்சுக்கள், சூழல்வெளிப்பாடுகள் எனப் பலரது எழுத்தாக்கங்களை இதழில் வெளியிட்டு அவர்களை உற்சாகப்படுத்துகிறது. கௌரவ இணைப்பாளர்கள் எனச் சர்வதேச ரீதியில் பல ஆர்வலர்களைக் கண்டு, ஒருங்கிணைத்து, அவர்களின்வழி இதழைப் பலருக்கும் அறிமுகப்படுத்தி, இதழின் பரவலுக்கு வழிவகுப்பது இவ்விதழின் சிறப்பானயுக்தி.

ஒவ்வொரு இதழிலும் 'ஆசிரியர் கருத்து' என குறிப்புரைகளை வெளியிட்டு வருகிறது. இக்குறிப்புரைகள் பொதுவாக தமிழர்களுக்கான சூழலையும், தன்மைகளையும் கோடிட்டுக் காட்டுவனவாக உள்ளன. பொருளீட்டுவதற்காகவும், அகதிகளாகி—வாழ்விடத்திற்காகவும், பூவுலகின் எல்லாப்பகுதிகளிலும் வாழுகிற, தமிழர்களது நிலையுணர்த்துகிற சிறு குறிப்புகளாக இவைகள் காணப்படுகின்றன. புதிய சூழலில் தமிழ்ச் சிறுவர்களது கல்விநிலை, தமிழர்கள் மீதான தாக்குதல், தமிழர்களின் அரசியல், ஜனநாயகம், தமிழ்த்தலைமைகள், சாதிப் பாகுபாட்டுக்கொடுமை, ஐரோப்பாவில் தமிழர்நிலை, உலகில் ஏனைய சிறுபான்மையினரின் நிலை, தமிழர்களின் முற்போக்குவாதம், சினிமா மோகம், நாக்குச்சுவையையே முக்கியப்படுத்துதல், தமிழர்களும் மனித உரிமையும், தமிழர்களும் இஸ்லாமும், தமிழர்களுக்கான நன்றியுணர்வு, விடுதலைப்புலிகளுக்கான முக்கியத்துவம், தமிழர்களும் இந்தியாவும், தமிழர்களும் ஒற்றுமையும், தமிழர்களும் கண்ணிவெடியும், தமிழர்களும் சிங்களவர்களும், தமிழில் ஒலிபரப்புச் செய்யும் உலகவானொலிகள் எனத் தமிழர்களது பல்வேறு சூழல்கள்பற்றிய குறிப்புரைகளை இதழ் வெளியிட்டுள்ளது.

இவ்விதழில் வெளியாகி வருகிற 'சர்வதேசத் தமிழர் தகவல்சேவை' என்ற பகுதி மிகவும் உபயோகமான பகுதியாகும். குழுக்களாகச்சிதறி வாழ்ந்துவருகிற தமிழ்ச்சமுதாயம் பயன்படுத்துவதற்கான முக்கியமான பகுதியிது. உயர்கல்வி, விற்பனை, மனிதாபிமான உதவிக்கான முகவரிகள், வேலைவாய்ப்பு, அகதிகளுக்கான தகவல்கள், தமிழ்ச்சங்கங்களின் தொடர்பு முகவரிகள், தமிழ்ச் சஞ்சிகைகளுக்கான முகவரிகள் — எனத் தொடர்ந்து ஒவ்வொரு இதழிலும், புதிய புதிய முகவரிகளை வெளியிட்டு வருகிறது. தனக்குக் கிடைத்த தகவலை மற்றவர்களுக்கும் அறிமுகப் படுத்தவேண்டும் என்று நினைக்கிற இவ்விதழின் பாங்கு பாராட்டுதற்குரியது.

இவ்விதழில் வெளியாகி வருகிற கவிதைகள் பொதுவாக உரைவீச்சாக, ஆரம்பகட்ட எழுத்தாளர்களுக்கான படைப்புகளாகவே காணப்படுகின்றன. கவிதைகளுக்கான கவித்துவத்தைவிட, எல்லாப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களை இப்பகுதிவழி இணைத்துவிடவேண்டும் என்ற குறிக்கோளே இப் பகுதியில் பளிச்சிடுகிறது. கலாவிஸ்வநாதன், சிவா ஏகர்சுண்ட், நக்கீரனார், அமரசிங்கம், பாரதி கற்பகம், மதுமாரி, இரா.ரவி, முரளி, முகமது கவுஸ்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொற்ஸ்வானா:கமலா.வேலுப்பிள்ளைபுருணை: எம்.ஐ.எம்.நகீப் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தாசிங்கப்பூர்:மு.பத்மா கு.இரஞ்ச குணாளன் மலேசியா:க.மாணிக்கவாசகர்,க.கணேசன் ,இர.ந.வீரப்பன்இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்;மு.சந்திரசேகரன்; யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன்;லட்சுமணன் பர்மா:அப்துல் ரசாக்

பீஷ்மாச்சாரி என ஒரு பெரிய பட்டாளத்தையே இதழ் அறிமுகப்படுத்தி இருக்கிறது. வ.ஐ.ச.ஜெயபாலன், க.சபாரத்தினம், என்.எஸ்.பிரபு போன்ற தரமானவர்களின் படைப்புகளையும் இதழ் வெளியிட்டுள்ளது. ஒரு யாழ்ப்பாணத்து மரணஓலம், என்ற கவிதையில் மரணம்கூட பொருளாதார வரவுகளில் நிச்சயிக்கப்பட்டு அழமறந்த தன்மையைக் கணபதி கணேசன் காட்டுவது மறக்கமுடியாததாக உள்ளது. முறிக்க முடியாப் பனைமரம் கடவுளிடம் ஒரு பிரார்த்தனை என்ற கவிதையில் சுவீடனைச் சேர்ந்த பீற்றர் டைல்க், இலங்கை இராணுவத்தாலான அழிவுகளையும், தமிழ்ச் சமுதாய சீரழிப்புகளையும் குறியீடாகக் காட்டி, பனைமரத்தை முறித்துவிட முடியாது என நெஞ்சுயர்த்திக் கவிதை படைத்துள்ளது வாழ்த்துதற்குரிய சிறப்பான கவிதையாகும்.

இவ்விதழில் வெளியாகிவருகிற சிறுகதைகள் புகலிடவாழ்வின் நிகழ்வுக் குறிப்புகளாக விளங்குகின்றன. பொதுவாக இவ்விதழ்ச் சிறுகதைகளின் அடித்தளம், காதலை முதன்மைப் படுத்துவதாக உள்ளன. ஓ மாணவனே, நன்றியீனம்தான் உலகின்வெகுமதியோ, இவள் யார், சிரித்து வாழவேண்டும் காகிதப்பூ, கிராமியக் காதலர்கள், மௌனமே நினைவுகள், ஊருக்கு உபதேசம், விழிப்புணர்வு, எங்களை வாழவிடுங்கள் என வெளியாகியுள்ள கதைகள் நிகழ்வு விவரிப்புத் தொகுப்பு வரிகளே. ஞானம் பிறந்தது என்ற சிறுகதையில் ' ஒருவரில் ஒருவர் தங்கி வாழவேண்டிய அவசியம் இல்லை, அன்பு செலுத்தினால் போதும், மற்றபடி அவரவர் விருப்பப்படி இயங்கலாம்' என்ற நார்வே வாழ்வியலை மையப்படுத்தி எழுதியுள்ளது நாமும் யோசிக்க வேண்டிய கருத்தியலே. 'பனிப் பூக்கள்' என்ற தொடர்கதை இதழ் 7 ல் தொடங்கி இன்னும் தொடர்ந்து வருகிறது. காரையூரானின் இத் தொடரில் நார்வேயில் வாழுகிற தமிழ்ப் பெண், நார்வே இளைஞரைக் காதலிப்பதும், காதலுக்கான தமிழ்க்குடும்பத்தின் எண்ணவோட்டங்களும், நார்வே நாட்டுச் சட்டம் பற்றியும், காதலுக்காகக் கிளர்ந்து எழுகிற யுவதியும் காட்டப்பட்டு தொடர் சுவையுடன் தொடர்கிறது.

'பேட்டிகளை'யும் இவ்விதழ் வெளியிட்டுள்ளது. பேட்டிகள் குறைந்த பக்கங்களுடன் வெளியிடப்படுவதால் முழுமைகாட்ட முடியவில்லை. இருந்த--போதும், வெளியான பேட்டிகள் சமகால நடைமுறைச் செயற்பாடுகளுடன் ஒத்தனவாக இருந்து, சிறப்புச் சேர்க்கின்றன. பொதுவான பிரச்சனைகளை, உல்றிக்யோசவ்சன், ஓமுண்ட்பிர்கலாந்த் பேட்டிகள் அலசுகின்றன. தமிழ் இளைஞர்களை பணம் காய்க்கும் மரங்களாகவும், பாரஞ்சுமக்கும் மிருகங்க--ளாகவும் கருதுகிற உறவினர்களின் பேராசைநிலை மாறவேண்டும் என்கிறது வ.ஐ.ச.ஜெயபாலன் பேட்டி. தமிழர்களுக்கு ஒழுங்கு ஒற்றுமை அவசியம், பொறாமைகூடாது என்கிறது ரி.எஸ்.ராகவேந்தருடனான பேட்டி. ஈழத் தமிழர்களுக்கு நீதிவேண்டி நோர்வே பாராளுமன்றத்தில் குரலெழுப்புவேன் என்கிறது ஏரிங்க் போல்க்வோட் அவர்களின் பேட்டி. இலங்கை மலையக மக்களது அவலநிலையை விவரிக்கிறது மலையக மூதாட்டியின் பேட்டி. மேலும் சாந்தாதத், நார்வே பாதுகாப்பு அமைச்சர், ஔப்பமண்ணா, றொனோக்ஹில்டன், வியட்னாமிய ரானத்றை, ஆந்திர நரசம்பா போன்றவர்களுடனான பேட்டியையும் இதழ் வெளியிட்டுள்ளது.

இவ்விதழ் கட்டுரைகளுக்கான பங்களிப்பையும் செய்துள்ளது. தமிழும் சமயமும் நம்மிருகண்கள், எனது நகரம் திருகோணமலை, இலண்டன் வாழ்தமிழர்கள், இலங்கைக் கண்ணோட்டம், சீனமருத்துவத்தில் சிறந்த தமிழ்மருத்துவர், பாட்டி வைத்தியம், தற்காலக்கவிதையின் பரிமாணங்கள் மாஸ்கோவில் மறக்கமுடியாத அனுபவங்கள், ச.வே.பஞ்சாட்சரத்தின் கவிதைகள் எனப் பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இக்கட்டுரைகள் மேலோட்டமாக இருந்தாலும், முக்கியமான கருத்தை விட்டுவிடவில்லை.

ஒரு இதழ் சக இதழாளர்களுக்கு மதிப்புத்தந்து அவ்விதழ்கள் பற்றிய குறிப்பினை வெளியிடுவது வணங்குதற்குரிய செயலாகும். புத்தம் புதிய புத்தகமே! என இதழ்கள் பற்றிய விளக்கம் தருகிறது இவ்விதழ். இந்த வகையில் உதயம், தமிழருவி இதழ்களைக் குறிப்பிட்டுள்ளது. வாசித்தீர்களா என்ற தலைப்பில் எரிமலை, சிற்றிதழ்ச் செய்தி, ஈழநாடு, பூவரசு, மலேசிய நண்பன், தமிழ்நேசன், இதயம், மயில், சூரியன் போன்ற இதழ்களைக் குறிப்பிட்டுள்ளது. புதுக்கவிதைத் தொகுப்பும், ஆண்டுவிழாச் சிறப்பிதழும் இவ்விதழின் விமர்சனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!

சிந்தனைத் தடாகம் என்ற தலைப்பில் தரமான கருத்துக்களைப் பல நூல்களிலிருந்தும், தொகுப்புகளிலிருந்தும் மறுபிரசுரமாகத் தந்துள்ளது. சமகாலச் சிற்றிதழ்களிலிருந்தும் குறிப்புகளை எடுத்து மறுபிரசுரம் செய்துள்ளது. வெளியாகும் வெளியீடுகளைப் படிக்க, சிந்திக்க வாய்ப்பு அற்ற வெளிநாட்டுத்தமிழர்களுக்கு இந்த அணுகுமுறை மிகப்பயனுள்ளதாக இருக்கும். இதற்கான பக்கங்களை அதிகரிப்பதும் தேவையானதே. மேலும் சுவிஸ் போலீசாரின் கொடுமைகள் பற்றிய தமிழ் அகதியின் குறிப்பை வீரகேசரி இதழிலிருந்து எடுத்து மறுபிரசுரம் செய்துள்ளது. இக்குறிப்பு தமிழ் அகதிகளின் கையறு நிலையை விளக்குவதாக உள்ளது.

இவ்விதழ் வெளியிடும் தொடர்கள் ஈர்ப்புடையவைகள். ஆரையம்பதி க.சபாரத்தினம் எழுதிய 'மாஸ்கோவில் எனது மறக்கமுடியாத அனுபவங்கள்' இரஷ்யாவில் இலங்கை அரசுப்பிரதிநிதியாக இருந்து, அவர் கண்ட அனுபவத் தொகுப்பு இது. எட்டு இதழ்களில் சுவையாகத் தொடர்ந்த தொடரிது. அண்ணாமலைப் பல்கலைக் கழக பேராசிரியர்.வ.மாசிலாமணி 19 ஆம் நூற்றாண்டுகளின் தமிழ்க் கவிதையின் பரிமாணங்கள் என்ற தொடரைத் தொடங்கியுள்ளார். இதழாசிரியர் என்.எஸ்.பிரபு மாஸ்கோ, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்று அதன் வெளிப்பாடான பயண அனுபவத்தை 'தென்கிழக்காசிய பயண அனுபவங்கள்' என்று சுவையாக எழுதியுள்ளார். தொடருகிற தொடரிது.

இவ்விதழ் 2-ஆவது இதழிலிருந்து "வாசகர் கடிதங்களை" வெளியிட்டு வருகிறது. இவ்விதழின் சிறப்பு இந்த வாசகர் கடிதங்களே. பூமிப்பந்தின் எல்லாப்பகுதிகளிலும் வாழுகிற தமிழ்மக்களது உணர்வுகளை, சூழலை, ஏக்கங்களை, எதிர்பார்ப்புகளை அவர்களது கடிதவரிகளின்வழி வெளியிட்டு அவர்களுக்கிடையிலான இணைப்பையும், அவர்களுக்கான வழிகாட்டுதலையும் சிறப்பாகச் செய்து வருகிறது. வடதுருவநகர் வார்ட்டோ, கார்மோய் தீவு, ஏகர்சுண்ட் நகரம், நெதர்லாந்து, தாய்லாந்து, ஹைதராபாத் எனத் தமிழர்கள் வாழுகிற பல்வேறு பகுதிகள் பற்றிய குறிப்பினையும், தமிழர்களது நிலை--யையும் இக்கடிதவழி அறிய முடிகிறது. தமிழ் கேட்க விரும்பும், தமிழ்த் தொடர்புக்காக ஏங்கும், ஈழத்தமிழர்களுக்காக வெகுண்டெழும், கடிதவரிகளைக் காணும்போது நம் நெஞ்சுவிம்முகிறது. தமிழக மக்கள் ஆற்றவேண்டியவைகள் கண்முன் நிழலாடுகிறது. தமிழ் மக்கள் யோசிப்பார்களா?

விளையாட்டிற்கான இதன் குறிப்பு இரண்டு இதழ்களில் மட்டுமே காணப் படுகின்றன. முதல் இதழில் ஒஸ்லோவில் நடத்தப்பட்ட பனிக்கால 17 வது ஒலிம்பிக்போட்டி பற்றியும், பிறகு வார்ட்டோ தமிழ்ச்சங்கத்தின் 5 வது வருட விளையாட்டுப் போட்டி பற்றியும் குறிப்புகளை வெளியிட்டுள்ளது.

அன்னாசிகேக் செய்யும் சமையல் கலை பற்றியும், எண் சோதிடம் பற்றியும், கருத்துக் கணிப்பு என இலங்கைப் பிரச்சனை பற்றியும், சர்.சி.வி.ராமன் அட்டைப்படத்துடன் குறிப்பும், நார்வே திருமணச் சட்ட திருத்தங்கள் பற்றியும் சிறு சிறு குறிப்புகளாக வெளியிட்டுள்ளது.

கெட்டியான தரமான தாளில், நேர்த்தியாக அச்சாக்கம் செய்யப்பட்டு இலவசமாக அறிமுகம் செய்யப்பட்டு, உலகின் எல்லா மூலைகளுக்கும் விநியோகிக்கப்பட்டு, எல்லாத் தரப்பு மக்களுக்கும்/படைப்பாளிகளுக்கும் இயங்குதளமாகச் செயற்பட்டுவரும் இவ்விதழ் சர்வதேசத் தமிழர்களுக்கான தொடர்பு தளமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

விளம்பரம்:
மலிவான விமானச்சீட்டுகள் பெற உடன் தொடர்புறுக :பாங்கொக் 4300,-பேர்லின் 1990,-பாரிஸ் 2600,-கொழும்பு 4350,-(5350,-)மாலைதீவு 4500,-சிங்கப்பூர் 4300,-கோலாலம்பூர் 4300,-கொங்கொங் 5200,-சியோல் 5200,-ரோக்கியோ 5000,-சிட்னி 6450,-தென்.ஆபிரிக்கா 5100,-ஒக்லாந்த் 9100,-கென்யா 4800,-டெல்லி 4300,-கத்மண்ட் 5900 சென்னை 5350,-(5500)லண்டன் 1950,-நியுயோர்க் 3390,-உலகவலம் 12900,-(நோர்வே குறோணர்) (வரி,கமிசன்250,-தனி) (இருவழி) (தபால்மூலம் சீட்டுபெறவும்,தபால்கந்தோருடாக பணம்செலுத்தவும் முடியும்!) TEL/FAX. 32.813416



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழரில்,வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்!
ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்!
ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

## பிரபஞ்ச மர்மம்!

---

**டாக்டர். ஆ. விசாகரத்தினம்**

லண்டன்

---

இந்த பிரபஞ்சம் என்னும் இயற்கை
பற்றியும், இதில் தெரிந்துகொள்ளமுடி
யாத சிலமர்மம் பற்றியும் விஞ்ஞான
ரீதியாகவும், மெய்ஞானரீதியாகவும்
ஆராய்ந்து அறிந்த கருத்துக்களை
உங்கள்முன் சமர்ப்பிக்கிறேன்.

பல பதார்த்தங்களின் குணங்களை
ஆராய்ந்து, நோயின் குணங்களுக்கு
மாறான குணங்களையுடைய, பதார்த்
தங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்
றை நிரைப்படுத்தி, கலவைசெய்து
மகத்தான மருந்துகளை ஆக்குகிறா
ன், ஒரு வைத்தியன். பல்வேறுபட்ட
காட்சிகளையும் கற்பனைகளையும்
தேர்ந்தெடுத்து, அவற்றை நிரைப்படுத்
தி தனது இலட்சியத்தை வெளிப்படு
த்தும் நோக்கோடு, நல்ல அம்சங்கள்
பொருந்திய கதைகளையும், நாவல்க
ளையும் உருவாக்குகிறான், ஒரு கதா
சிரியன். இதுபோலவே பலநூல்களின்
சாரங்களை அலசி ஆராய்ந்து, அவற்
றில் பொதிந்திருந்த நல்லகருத்துக்க
ளை நியாயப்படுத்தி, அவற்றை நிரைப்
படுத்தி நம் எதிர்காலசந்ததியினரின்
நல்வாழ்வுக்கும், முன்னேற்றத்துக்கும
ாக இவ்வுரையை வெளியிடல் மனித
கடமைகளிலொன்றுஎனஉணர்கிறேன்
என் தந்தையார் பல வைத்தியர்கள்,
சந்நியாசிகளுடன் பழகியபோது, நான்
சிறுவனாக அவதானித்த பலகருத்து
களும், பாரம்பரிய வைத்தியகுடும்பத்தி
ல் பிறந்ததால் சித்தர்கள், முனிவர்க
ளால் பாடப்பட்ட பிரபஞ்சஉற்பத்தி
அங்காதிபாதம் போன்ற பலவைத்திய
நூல்களையும், நிகண்டு, கைவல்யம், ஜீ
வப்பிரம ஐக்கியவேதாந்தரகசியம்,
மனிதனில் மறைந்துள்ளசக்தி போன்
ற பல தத்துவநூல்களையும் படித்த
றியும் வாய்ப்பு கிடைத்தது. அத்தோடு
தேவார, திருவாசகம், திருப்புகழ், திரும
ந்திரம், நன்னெறிபோன்ற பலநூல்களி
ல் கண்ட பல அருங்கருத்துகளின்
தூண்டுதல்களும் என்உள்ளத்தில்
இப்பிரபஞ்சத்தின் மர்மம் யாது?என்ற
கேள்வியை தூண்டிவிட்டது. என்வாழ்
வில்கடந்துவந்த மேடு, பள்ளங்களை
எப்படி சமாளிப்பது?என தடுமாறிய
போதும் இந்தக்கேள்வி அடிமனத்தே
தீச்சுடராக, ஆறாத தாகமாக வளர்ந்
துகொண்டே இருந்தது.

கற்றோரும், மற்றோரும் எழுதிய, சொல்
லிய பலஅரிய கருத்துக்களையும், அவ
ற்றின் துணையுடன் பலதரவுமுறைக
ளையும், தத்துவசமன்பாடுகளையும்
ஒப்பிட்டு ஆராய்ந்து, எனது சொந்த
சிந்தனைகளையும், அனுபவங்களையு
ம், ஆய்வுகளையும் நிரைப்படுத்தி
மனிதசமுதாய முன்னேற்றம்கருதிய
இவ்வுரையை வெளியிடுகிறேன். எனது
வயது, அனுபவம் காரணமாக என்
மனோநிலை முன்பிருந்தஇடத்தைவிட்
டு எங்கோ தொலைவில் அமைதியை
நோக்கிவந்திருப்பதை உணர்கிறேன்.
ஏனெனில் மனிதஆசைகளின் அட்ட
காசம் அடங்கித்தெரிகிறது. உணர்
வின் குமுறல்களும் உறங்கிவிட்டன.
இதனால் மனம் ஆர்ப்பாட்டமற்ற, மேடு
பள்ளமற்ற சமதரையில் நடப்பதுபோ
ல் ஒரு சுகானுபவத்தை தருகிறது.
மனம் தெளிவாக இருப்பதால் அதன்
அடித்தளத்தில் அற்புதநிகழ்வுகளை
யும், இயற்கையின் எழில்பற்றியும், சிந்தி
த்து சுவைத்திருப்பதில் ஒரு இனிமை
அமைதியை கண்டு ஆனந்தமடைகி
றேன். எனினும் கடந்தகாலவாழ்வின்
ஊமைச்சித்திரசிதிலங்கள் சிதைவுண்
டு இருப்பதையும் காண்கிறேன். அவற்
றின் துர்நாற்றங்களும், நறுமணங்களு
ம் அடித்தளத்திலிருந்து மேலெழுந்து
வந்து உடைவதையும் காண்கிறேன்.
கடந்தகாலசித்திரங்கள் பலவிதசூழ
ல்களாலும், அறியாமையாலும் வரைய
ப்பட்டதாயினும், அவற்றின் சிதைவுக
ளின் வாசனை தொடர்ந்தும் சலனம்
தருகின்றன. இந்தமனத்தின் விசித்திர
நிலையை என்னவென்று கூறுவது?
இந்த அகத்தின்அற்புதநிகழ்வுகளை
ஆழ்ந்து ஆராயும்போது, அது பிரபஞ்ச
ம் போல் பரந்துசெல்வதைப் பார்க்கி
றேன். இந்தமனமே மனிதவாழ்வின்
உயர்வு-தாழ்வுக்கும் மூலகாரணம்
என எண்ணுகிறேன். இவ்வுலகில்
எப்பொருளும் அழிந்துவிடுவதில்லை
எனும் தத்துவத்திற்கிணங்க, மனதி
ரையின் பதிவுகளும், மணந்துகொண்
டிருப்பதால், அவற்றின் வாசனைகளும்
வேறுவடிவங்கள் எடுப்பதைக்
காண்கிறேன். இத்தகைய விசித்திர
மனத்தின் நடனத்தால், வந்த தொடர்
நாடகத்தின் ஊமைச்சித்திரங்களுக்
கு உருவும், ஒளியும்கொடுத்து அதை
ஓர் உரைவடிவமாக்கமுயல்கிறேன்.
இப்பிரபஞ்சத்தின் எல்லையற்றதன்
மையையும் அதில்நிகழும் எண்ணற்ற
அண்டசராசரங்களின் செயல்பாடுக
ளையும், அவற்றின் தோற்றத்துக்கும்,
வாழ்வுக்கும் அழிவுக்கும் காரணகர்த்
தாவான மர்மதாரகை யாது? என
அறிவது கடினமான காரியம். இதன்
உயர்தத்துவங்களையும், மர்மமானநி
கழ்ச்சிகளையும் சாதாரணர்களும்
புரிந்துகொள்ளக்கூடிய வகையில் மிக
நுட்பமான தீர்வுமுறைகளாலும், சமன்
பாட்டு விளக்கங்களாலும் உவமான
ங்களுடன் விளக்கமுயல்கிறேன். இது
உள்ளத்தின் இடைவிடா உந்தலால்
ஏற்பட்ட ஒரு முயற்சி!
இதை அறிவுஜீவிகட்கு மட்டுமன்றி, சா
தாரண மனிதர் சிந்தனையிலும் எட்ட
வைத்து ஆராய்ச்சிஅலை மோதவைக்
கவேண்டுமென்பது எனது ஆசையா
கும். எமதுசமுதாயத்தில் மறுமலர்ச்சி
ஏற்படவேண்டும், எதிர்காலசந்ததியின்
ஒளிமயமான வாழ்வுக்கு ஓர்திருப்புமு
னையாகக் கலாசாரத்தைகட்டிஎழுப்ப
அத்திவாரமிடும் இலட்சியநோக்குடனு
ம் இவ்வுரையை நிகழ்த்திவருகிறேன்.
இயற்கையின் தத்துவத்தை உணர்த்
தும் தமிழரின் மறைந்துபோன திராவி
டநாகரிகத்துக்கு புத்துணர்வு ஊட்டி
வளர்ப்பதற்கு கையாளப்படவேண்டிய
தமிழ்கலாசாரநியதிகளையும், நெறிகளை
யும், பகுத்தறிவுகொண்டு காலத்துக்
கேற்ப விஞ்ஞானரீதியாயும், மெய்ஞான
ரீதியாயும் சித்தாந்தரீதியாகவும், ஆரா
ய்ந்த கருத்துக்களை உங்கள் சிந்த
னைக்கு விருந்தாக்குவதில் மகிழ்வ
டைகிறேன். மனிதவாழ்வுக்கு மிகஉய
ர்ந்த, கலையம்சம்கொண்ட, புனிதமான
நெறிகளே (விதிமுறைகள்) அத்திவாரம்
எனஉணர்ந்து, அவற்றைநெறி, இயல்,
ஆச்சாரம், கொள்கை என நம்முன்
னோர் கூறியுள்ளனர். ஓர் உயர்ந்த
தத்துவபுனிதத்தையும், மகத்துவத்தை
யும் பேணிக்காப்பதற்காக மனிதர்
களால் வகுக்கப்பட்ட, நெறிமுறைவிதி
களும், கலைஆசாரங்களும் வெவ்வே
று சூழல்கட்கு அமைய பலசமயங்க
ளாகவும், கொள்கைகளாகவும் நடை
முறைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற
ன. இத்தகைய உயர்தத்துவங்களை
நடைமுறைப்படுத்த வேண்டி வகுக்க
ப்படும், சமயக்கொள்கைகளும், ஆச்சா
ரங்களும் குறிப்பிட்ட சிலநூற்றாண்டு
கட்குமேல் தொடர்ந்து கடைப்பிடிக்க
ப்பட்டுவரும்போது அது தேக்கநிலை
யை அடைகிறது. பலசுயநலமைகளின்
ஊடுருவல்காரணத்தால் இறுக்கம்
தளர்ந்து பல ஒழுக்குகள் ஏற்படக்
காரணமாகியது. தேக்கநிலையின்
அழுக்கை களைந்து, புதியகொள்கை
களையும், நெறிஆச்சாரங்களையும்
காலத்துக்கேற்ப மக்கள் அதை ஏற்
கும் வகையில் எடுத்துரைத்து, அப்
புனிததத்துவம் காப்பாற்றப்பட வேண்
டும். அப்போதுதான் மனிதசமுதாயத்
தில் ஓர் ஒளிமயமான புனர்வாழ்வு
தோன்ற வழிபிறக்கும். இதுவே உண்
மையான கலாசாரப்புரட்சியுமாகும்.
இத்தகைய புனரமைப்புகள் காலத்து
க்கு காலம் பல ஆத்மஞானிகளாலும்
மகான்களாலும் நடைமுறைப்படுத்தப்
பட்டதை உலகவரலாறு, காட்டுகிறது.
யதார்த்தநிலையில்அமைதியற்ற ஓர்
அழிவுப்பாதையில் செல்லும் மனித
வாழ்வுக்கு, அமைதிவழியில் ஓர் கலா
சாரப்புரட்சி தேவை!எனமக்களை
உணரச்செய்யவே இந்த உரையை
நான் நிகழ்த்திவருகிறேன் (வளரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள் உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக! முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

## ஜப்பானில் அண்ணாயிசம்!

டாக்டர்.சச்சி சிறீகாந்தா,
புக்குரோய் நகர்-ஜப்பான்

முன்னாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் தனது அரசியல்கொள்கையாக அண்ணாயிசம் எனும் தத்துவத்தை தமிழர்கட்கு அறிமுகப்படுத்தியது யாவரும் அறிந்ததே. அண்ணாயிசம் என்றால் என்ன எனகேள்விஎழுந்தபோது, எம்.ஜி.ஆர். -சோசலிசம், கம்யூனிசம், ஜனநாயகம் மூன்றும் இணைந்த ஓர் அரசியல் பாதையே அண்ணாயிசம் எனும் விளக்கம்அளித்ததையும் பலர் மறந்திருக்கமாட்டார்கள்.

அப்போது அண்ணாயிசத்தைப்பற்றி பல படித்தமேதைகள் ஏளனம் செய்தனர். அரசியல்விமர்சகர்கள் எம்.ஜி.ஆரின் அரசியல் அஞ்ஞானம்பற்றியும் காரசாரமாககண்டித்து கருத்துக்கள் வெளியிட்டனர். அண்ணாயிசத்துக்கு உதாரணமாக எந்தநாட்டின்அரசியல் பாதையை காட்டமுடியும்?எனுங்கேள்வியும் எழுந்தது. எம்.ஜி.ஆர். அப்போது இதுபற்றிய கேள்விகட்கு விபரமாக பதில் தரவில்லை என்றே நான் கருதுகிறேன்.

ஜப்பானிலே நான் 1986ம்ஆண்டிலிருந்து (89-90 தவிர) வாழ்ந்துவருகிறேன். இந்த நீண்டகாலவாழ்க்கை அனுபவத்திலிருந்து நான் கண்டுபிடித்தது பலதமிழர்கட்கு ஆச்சரியமாக இருக்கலாம். எம்.ஜி.ஆரின் அண்ணாயிசம் தத்துவம் ஜப்பானில்தான் உயிர்பெற்றுள்ளது. பொதுவாக ஜப்பான் ஒரு ஜனநாயகநாடு என பிறநாட்டினரால் கணிக்கப்பட்டாலும், ஜப்பானில் நீண்டகாலம் வாழ்ந்து அனுபவம் பெற்றவர்கள் ஜப்பானை அமெரிக்காவுக்கு சமமான ஜனநாயகக்கொள்கைகள் ஆழப்பதிந்துள்ள ஒருநாடு எனக்குறிப்பிடமாட்டார்கள். ஜப்பானுடைய ஜனநாயகமானது கடந்த 50ஆண்டுகளாக அமெரிக்கராணுவத்தளபதி டக்ளஸ் மக்கார்தர் அறிமுகப்படுத்திய-மேற்பூச்சு ஜனநாயகமே-. இந்தமேற்பூச்சு ஜனநாயக முலாமைச்சுரண்டினால், அடிப்படையாக உள்ள சோசலிச, கம்யூனிச தத்துவங்களின் தீவிரகவர்ச்சி ஜப்பானிய சமூகத்தில் ஆளப்பதிந்துள்ளமை தெரியவரும்.

தற்போது சோசலிச, கம்யூனிசதத்துவங்கள் உலகரீதியில் கவர்ச்சிகுன்றிய நிலையில் காட்சியளிக்கின்றன. இதற்குக்காரணம் அமெரிக்கபொருளாதாரமும் விளம்பரநோக்கிலே சர்வதேசரீதியில் ஆக்கிரமித்துள்ள பிரபல செய்திபரப்புதாபனங்களின் பிரசாரப் பலமுமேயாகும். ஆனால் சோசலிச, கம்யூனிசதத்துவங்களை அடிப்படையாகக்கொண்டு, ஜனநாயகஅரசியல் முலாமைப்போர்வையாக அணிந்த ஜப்பானின் வளர்ச்சியை மற்றையநாட்டினர் வியந்துபாராட்டுகின்றனர். ஆசியாவின் மற்றையநாடுகள் யாவும் ஜப்பானைப்போன்று முன்னேற,நாளாந்தம் முயற்சிசெய்துவருகின்றன. ஜப்பானுடைய அமெரிக்கமுலாமை விவரிக்க சொல் ஆங்கிலத்தில் இல்லை. மேற்கத்திய விமர்சகர்கள் ஜப்பான் ஒரு ஜனநாயகநாடு எனக்கூறுமதே வேளையில், ஜப்பானின் ஜனநாயகம் தமது மேற்கத்தைய ஜனநாயகப்பாரம்பரியத்திலிருந்து, வேறுபட்டுள்ளது, என்றும் அங்கலாய்க்கின்றனர்.

இந்தமுரண்பாடுகளைப்படித்த பின்னரே ஜப்பானுடையஜனநாயகம், எம்.ஜி.ஆரின் அண்ணாயிசத்துக்கு உதாரணமாக உள்ளது, எனும் முடிவுக்கு வந்தேன். ஜப்பானுடைய இச்சிறப்புத்தன்மையை பற்றி எம்.ஜி.ஆர். அறிந்திருப்பாரோ?எனுங்கேள்வி அடுத்து எழுகிறது. எம்.ஜி.ஆருக்கு ஜப்பானில் அதிகஆர்வம் முன்னர் இருந்தது, என்பதையும் நாம்மனதில் கொள்ளவேண்டும். அவர் சொந்தமாகத்தயாரித்த -உலகம் சுற்றும் வாலிபன்-திரைப்படத்தை ஜப்பானிலே படம்பிடித்தார். அப்போது, அவர் ஜப்பானின் அரசியல் சமூக, பொருளாதாரசிந்தனைகளைப் பற்றி பயிலக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றே நான் நம்புகிறேன். பல்கலைக்கழகத்திலே ஏட்டுப்படிப்புபடித்த, பொருளாதாரமேதைகளைவிட எம்.ஜி.ஆர். அவர்கள் ஒருபடி மேலேறி, சமூகபொருளாதார வளம் பற்றிய உண்மையானகல்வியை உலகம் சுற்றும்வாலிபன் திரைப்பட படப்பிடிப்புகாலத்தில் ஜப்பானிலேயே கற்றுக்கொண்டிருக்கிறார், என்றும் கருதலாம்.

கடந்தஓராண்டுக்கு மேலாக, ஜப்பான் உணவுதயாரிக்கும் கம்பெனியொன்றிலே நான் ஆராய்ச்சியாளராக தொழில் பார்க்கிறேன். இந்த ஓராண்டுகால வேலை அனுபவத்திலிருந்தும், ஜப்பான் ஒரு ஜனநாயகநாடு எனக்கருதினால் அது முற்றிலும் தவறானது எனவும் படித்துக்கொண்டேன். ஜப்பானிலே ஜனநாயகக்கொள்கைகளுக்கு மேலாக சோசலிச, கம்யூனிச கொள்கைகட்கு அதிகமுக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தனிமனிதசுதந்திரத்துக்கு மேலாக சமூகத்தின் உயர்வு பேணப்படுகிறது. அரசியல்நிறுவனங்களும், நீதிமன்றங்களும் கூட, தனிமனிதசுதந்திரத்துக்கு மேலாக சமூகத்தின் நெடுங்காலவளம் நோக்கியே தம் முடிவுகளைத்தீர்மானிக்கின்றன. சுருக்கமாககூறின் எம்.ஜி.ஆரின் அண்ணாயிசத்துக்கு, ஜப்பான் உதாரணம்!

## சர்வதேச தமிழர் அறிமுகம்:

**பேட்டி தருபவர் :நீங்கள்....!**
**பேட்டி காண்பவர்:ஆசிரியர்...!**

உலகின் பலபகுதியிலும் வாழும் தமிழரை அறிமுகம் செய்யும் உயர் நோக்கில் இப்பகுதி அறிமுகமாகிறது. கேள்விகள் இங்கே! பதில்களை நீங்களே எழுதி உங்களை நீங்களே அறிமுகம் செய்யுங்கள். பதில்கள் கருத்தாயும், சுவையாயும் அமையவேண்டும் ஆர்வமுள்ள யாரும் பேட்டிதரலாம். உடனே எழுதி அனுப்புங்கள்!நன்றி!!

1. உங்களைப்பற்றி கூறுங்கள்....?
2. உங்கள் ஊர், மாநிலம், நாடு பற்றி.?
3. எத்தகைய மாற்றம் உங்கள் சமூகத்துக்கு தேவை என கருதுகிறீர்கள்?
4. நீங்கள் வாழும்இட பிறமொழிசமூகங்கள்பற்றி உங்கள் கருத்து, உறவு:
5. தமிழர் சமுதாய முன்னேற்றம், ஐக்கியம் பற்றிய உங்கள் ஆலோசனை?
6. உங்கள் நாட்டுஅரசியல் பற்றியும் எப்படியான மாற்றம் முன்னேற்றத்துக்கு வழிதரும் எனவும் கருதுகிறீர்கள்?
7. மதஉறவுகள் எப்படி?மனிதநல்வாழ்வுக்கும், மேம்பாட்டுக்கும் மதம், உதவுகிறதா?மனிதஉறவை மதம்கூட்டுமா?
8. ஆண்-பெண் சமத்துவம் பற்றி.....?
9. வறிய-பணக்கார நாடுகள், மனிதர்கள் உறவுபற்றி .......?
10- ஐரோப்பா ஒன்றாவது பற்றியும் ஆசியா, ஆபிரிக்காவுடனான உறவும்.?
11. ஜனநாயகம், சோசலிசம், கம்யுனிசம் பற்றிய உலகின் அனுபவம், அனுமானம் பற்றியும், உங்கள்நாட்டுக்கு பொருத்தமான முறைபற்றியும்..?
12. தமிழகஅரசியல், சினிமாபற்றியும், எப்படி நல்லாட்சிக்கும், நல்வாழ்வுக்கும் வழிகாண்பது பற்றியும்?
13. ஈழத்தமிழர் அவலம்பற்றியும், தீர்வு பற்றியும்:வன்முறை?அரசியல்தந்திரம்?
14. உங்கள் இட சூழல்பாதுகாப்பு நிலைபற்றியும், தீர்வு, கவனம் பற்றியும்?
15. ஆயுதஉற்பத்தி, ஏற்றுமதி, ஆயுதகலாசாரம், வறியநாடுகளின்அழிவும் பற்றி?
16. உங்கள்இட தற்காலசஞ்சிகைகள் போக்கும், மாற்றத்தேவைகள்பற்றியும்?
17. பொருளியல்வாதம், மனிதாபிமானம் பற்றிய தற்கால உலகப்போக்கு பற்றியும், பொருத்தமான எதிர்காலதீர்வும்?
18. உங்கள் பிறநாட்டு அனுபவங்களும், நாம்அவற்றிலிருந்து கற்கவேண்டியவைகளும்...?
19. உலகில் தமிழ், தமிழர்எதிர்காலம்?
20. உலகத்தமிழர் ஒன்றிணைவதால் ஏற்படும் தூரநோக்கு நன்மைகள்?

(உங்களுக்கு பொருத்தமானகேள்விகளை மேலும் சேர்க்கலாம், விருப்பமற்றவைகளைவிலக்கலாம். உங்கள்தனியான, குடும்பபடமும் அனுப்பலாம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர் இலக்க நிலையம்
யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும்.
தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

**சர்வதேசதமிழர் கவியரங்கம்:**

**தருவாய் தாங்கும் சக்தியையே!**

வருவாய் உருவாய் திருக்குமரா
வரங்கள் அருள்வாய் வாழ்வினிலே
தருவாய் தாங்கும் சக்தியையே-ஈழ
தமிழர் துன்ப வாழ்வினிலே!

அருவாய் வருவாய் அருகினிலே
அல்லல் எல்லாம் அகற்றிடுவாய்
திருவாய் மலர்ந்து போதித்த
தன்னிகரற்ற வேதத்தினை

குருவாய் பகர்வாய் மாந்தர்க்கு
குன்றாய் என்றும் மனத்தினிலே
தெருவாய்திரியும் தமிழினமோ
திரும்பமலர்ந்து வாழ்ந்திடவே

எருவாய் அவர்கள் இதயத்தில்
என்றும் தியாகம் ஊட்டிடுவாய்
ஒருவாய் சோற்றைத்தேடித்தினம்
ஓங்குந்துயரில் ஒழிவோர்க்கு

வருவாய் வாழ்வில் வரச்செய்வாய்
வலிமை மனதில் உரச்செய்வாய்
கருவாய் வருவாய் காருண்யா!
கருத்தாய் உதிப்பாய் மனத்தினிலே

செருவாய் புரிந்து அசுரருடன்
செருவில் பெரியவேங்கைமர
உருவாய் வந்த சூரனையே
உரித்தாய் வென்றாய் மால்

மருகாய் வள்ளி தெய்வானையுடன்
மாங்கல் யங்கள் பூண்டவனே!
பெருவாய் கொண்ட கோவில்களில்
புகழும் துதியும் பெற்றவனே

சொருவாய் சிறப்பாய் அங்கெல்லாம்
செந்தமிழ் பண்பை வளர்ப்பவனே
விரைவாய் விறலே தமிழீழம்
வேலாய் வினையாய் உறைவாயே!

**செ.நாகேந்திரன்-லண்டன்.**

---

**வனத்தைக் காப்போம்!**

வனத்தைகாப்போம்,வனப்பும் வளர!
தனத்தைக்காக்கதாவரம் தனிப்பலம்!
இனத்தைகாக்கவும்,இதமாகவாழவும்
மனத்தைகாக்கவும்,வனமேவளம்தா!

கனமழைபெறவும் கானகம் வேண்டும்
மனமெழில்பெறவும் மாருதம்வீசவும்
இனமோடுவாழ,வனமேதான்வேண்டும்
தனமேதான் கிட்ட தருவும்கைதரும்!

காட்டுவிலங்கும் தெவிட்டாததேனும்
நாட்டுக்குவருவோரை வா!எனகூறும்
பாட்டுக்கும்பதவிக்கும் பாலர்மகிழவும்
ஏட்டுக்கும்வாழ்வுக்கும் பாலமேயாகும்

செடியும் கொடியும் மரமும் தானே
நொடியில்மழையை கொட்டச்செய்யும்
தடியும்கிட்டும்,கழியும் கட்டும்
மடியில் பழமும் தயவாய் கிட்டும்!

பூவும் பலவும் பூசும் சாந்தும்
சாவும் நீங்க சரக்கும் கிட்டும்
கூவும் மயிலும் கோலம்காட்டும்
ஏவும்அணைக்கு தடையும்உண்டேல்

மண்வளம் காக்க மரமும் உண்டு
கண்வளம் காக்ககாட்சியும் மண்டும்
எண்வகைத்தாவர வகையும்கொண்டு
பெண்தொகைகூட்டம் சேரும்அங்கே

காடுவளர்த்து காசை சேர்த்து
நாடுவளர்த்து நாமும் மகிழ்வோம்
ஏடும் எழுதும் எண்வகைப்பொருளும்
கூடும்நாளில் நாமும் களிப்போம்.

**என்.ஆர்.லட்சுமணன்.கைதராபாத்**

---

**என் வயது முப்பது!**

எதிர்வீட்டு அஞ்சலை
ஜன்னலோரம் தலைவாரும்பொழுதும்
புத்தகம் படிக்கும் பொழுதும்
பார்த்து,கண்ணடித்து கையசைக்கும்
வெட்டிஆபீசர் அண்ணன் உதயன்
திண்ணையிலமர்ந்து தன்னலமற்று
வருவோர் போவோரிடம் கதைபேசி
ஓய்வூதியம் பெறும் தந்தை
கல்லூரி செல்ல என்உடைகளை
உடுத்தும் தங்கை மீனா,
காலைகாட்சிதிரைப்படம் செல்லுமுன்
அன்னை,நான் அரிசிகளைகையிலே
'பார்த்துக்களையடி' என இடிப்பாள்.
அனைத்தும் சரியாய்செய்கின்றனர்,
என்திருமணம் தவிர.

**புதுச்சேரி ச.வேல்முருகன்**

---

**உலகிற்கு இளைத்தவன் தமிழன்!**

ஊருக்கு இளைத்தவன்
பிள்ளையார் கோவில்ஆண்டி!
உலகிற்கு இளைத்தவன்
தமிழன் தாண்டி!
இலங்கை என்றாலும்,
கர்னாடகம் என்றாலும்
பம்பாய் என்றாலும்
பாதிக்கப்படுவது தமிழன்தானடி!
இது ஏனடி?ஏனடி??
வந்தோரை எல்லாம்
வளமாகவாழவைத்து
வாழ்க்கைதேடி வெளியில்சென்று
விரட்டப்பட்டு அகதியாகிவருவது
வாடிக்கையானதடி!மிகவும்
வேதனையானதடி!
கொடிகட்டி வாழ்ந்த தமிழன்
கூடுகட்ட வழியில்லை!
புகழ்வாய்ந்த தமிழன்
புழுதிமண்ணில் வீழ்வதா?
யானைகட்டி போரடித்த தமிழன்
நரிகளிடம் தோற்பதா?
அய்யகோ! தமிழினமே!
விடியல் உன்வாழ்வில் விளையாதா?

**இரா.இரவி-மதுரை-1,தமிழ்நாடு**

**மனிதனின் பேதம்!**

**பல்லவி:**
வானம் ஒன்றுதான் பூமி ஒன்றுதான்
-மண்ணை
ஞானம் மனிதன் பிரிப்பதேன் பேதம்
கொண்டுதான் (வானம்)

**அநுபல்லவி:**
பானு ஒன்றுதான் நிலவுஒன்றுதான்
-அங்கே
பிரித்துவாழும்மனிதர்யாருமில்லைதான்
(வானம்)

**சரணங்கள்:**
நீலவானிலே பறக்கும்பறவைகள்
-வானைப்
பிரித்துவாழவே நினைப்பதில்லையே
நீலகடலிலே நீந்தும் உயிர்கள்தான்
-கடலை
பிரித்துவாழவே நினைப்பதில்லையே
(வானம்)
வானம் கடலிலே வாழுமுயிர்கள்போல்
-புவி
கானகத்திலே வாழும்விலங்குபோல்
ஞானங்கொண்டுதான் நீதிகண்டு
தான்-மனிதன்
வாழவேண்டும் சாதிமதபேதம்
மறந்துதான்
(வானம்)

**கா.இராசமாணிக்கன்-சேலம்.8**

---

**அப்புவுக்கு எம் அஞ்சலி!**

எங்கு சென்றீர்?அப்பு எங்குசென்றீர்?
என்னகொடுமையிது!உற்றாரருகின்றி,
எங்கு சென்றீர்?அப்பு! எங்குசென்றீர்?
ஏன்தான்சென்றீரோ!எத்தகுதுன்பமிது
அங்குவந் தும்மை,
காணவரும்நாளை
அமைதிப்பூங்காவை
ஏங்கியிருந்தோமே!
செங்களத்தால் சேறானஎம்நாட்டை,
சேரவிடா தெம்மைப்பழி அனுப்பியதே!
அங்குவரும் கந்தன் உலா
தனைமறவீர்,
ஆறாத கடவுள்அருள் கிட்டுமப்பு!
சிங்களத்துகொடுமையதால்
உலகமெங்கும்
சிதறியதே எங்களினம்!கடவுள்பாராய்!
எங்களிடம் மீண்டுமொரு
அமைதிப்பூங்கா!
என்றுவரின்,உம் ஆத்மா
மகிழ்வடையும்!
உங்களது நகைச்சுவையை
இன்றும்கூட,
எங்கள்மனம் களிப்புறவே
மெச்சுகின்றோம்!
தங்கமிகு அறிவுடனே அப்புநீங்கள்,
தரணியிலே வாழ்ந்ததுவும்
மாண்புதானே!

***என்.எஸ்.பிரபு***

(24.02.96 ல் மீசாலையில் காலமான எம்பேரனார் இனுவை.நா.கந்தையா அவர்கட்கு அஞ்சலிசெலுத்துமுகமாக இக்கவிதை சமர்ப்பணமாகிறது-ஆ.ர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேச தமிழர் தகவல்சேவை

---

1.சமர்:பிரான்சிலிருந்து வெளியாகும் மார்க்சியகருத்துகளை வெளிப்படுத்தும் அரசியல்தத்துவார்த்த விமர்சன இருமாதஇதழ்.தமிழ்அகதிகள் இலக்கியவட்டத்தால் வெளியிடப்படுகிறது. ஈழவிடுதலைப்போராட்டத்தை புதிய கோணத்தில் பார்ப்பது சிந்திக்கத்தக்கது.சர்வதேசதமிழர் சமருடன் நட்புறவு,ஒத்துழைப்பு,மாற்றீடு மேற்கொள்கிறது.மதிப்பவரை மதிப்போம்-எனும் கொள்கைக்கமைய தமது இதழை அனுப்பும் சகலருடனும் இதழ்மாற்றீடு மேற்கொள்ளப்படும்.

SAMAR.87Rue de colombes
92600Asnieres sur seine
France.

---

2.சிந்தனையாளன்:உலகத்தொழிலாளர்,ஒடுக்கப்பட்டதேசியஇனமக்கள்,வகுப்புமக்களுக்காக,மார்க்சிய-பெரியாரியவழியில் சமஉரிமை,சமதர்மகுடியரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான இந்திய கூட்டாட்சிக்காக பாடுபடும்,மாதஇதழ்.ஆசிரியர்குழுவில் வே.ஆனைமுத்து,சங்கமித்ரா,க.முகிலன்,து.தில்லைவனம்,புலவர் அஞ்சான்,க.நாகராசன்,வாலாசா வல்லவன் மங்கலம் அரசன் ஆகியோர் சிறப்பாக பணிபுரிவது பாராட்டத்தக்கது. சிந்தனையாளன்,ஆங்கிலசர்வதேசஇதழான பெரியார்யுகத்துடனும் நட்புறவு,ஒத்துழைப்பு,மாற்றீடு உண்டு.

The Editor:V.Anaimuthu,
SINTHANAIYALAN,
19 Murugappa st,
Chepak,Madras.5,India.
Tel.852.2862

3.நயனம்:மலேசியாவிலிருந்து வெளிவரும் மாதஇதழ்.அறிவுக்கும், மகிழ்வுக்கும் உரிய அம்சங்கள் பல நிறைந்தது.மலேசிய இணைப்பாளர் க.மாணிக்கவாசகரால் அறிமுகம்செய்யப்பட்ட இவ்விதழுடன் சர்வதேசதமிழர் நட்புறவு,ஒத்துழைப்பு,மாற்றீடு மேற்கொள்ளவிரும்புகிறது.

NAYANAM,2B.J.MuraiSathu
Batu Complex,Jalan Epoh
51200 Kuala lumpur,
Malaysia.Tl.Fx.6215229

4.இன்றைய இந்துசமயம்: ஆங்கிலத்தில் ஹவாயிலிருந்து வெளிவரும் இந்துசமயபத்திரிகை.சுப்பிரமுனியசுவாமிகள் உலகெங்கும் பரப்பும் இந்துதத்துவஇதழ்.குவை ஆதீனம் கோவில்கட்டும்பணியிலுமீடுபட்டுள்ளது.

Himalayan Academy,
107,Kaholalele rd,Kapaa
Hawaii,96746-9304 U.S.A
Tl.808.822.7032 Fx.4351

5.மதம்:இந்துமத தத்துவங்களை விளக்கி கனடாவிலிருந்து தமிழில் வரும் மாதஇதழ்.தற்காலதமிழர் வாழ்வு மேற்கத்தைய பொருளியல்வாதத்துள் மூழ்கிஅழியாது,ஆத்மிகநெறியில் அமைதி,மகிழ்வுபெற வழிகாட்டுமிதழ்.

Canada GnanaMantram,
421 Jane st.P.B.#25002,
Toronto,ONT.M6S.3Z0
Canada Tel.416.769.7747

---

6.உருமாறும் பழமொழிகள். என்.செல்வராஜா அவர்களால் அயோத்திநூலகசேவைவெளியீடாக இந்நூல் பலஅனுபவமொழிகளின் விளக்கமாக வெளிவந்துள்ளது.மதிநுட்பம், அறிவு,மரபு,பழக்கவழக்க கொள்கலனாக பழமொழிகள்விளங்குகின்றன, எனும் கலாநிதி.இ.பாலசுந்தரம்(யாழ் பல்கலைக்கழகம்)கருத்து மதிக்கப்படவேண்டியது.

N.Selvarajah,
27,white croft rd,
Luton,Bedfordshire
LU2OJS U.K.

(வாசகர்கள் உங்களிட பழமொழிகளை தொகுத்தனுப்பினால்,அவை சர்வதேசதமிழரில் வெளிவரும்-ஆ.ர்)

---

7.எக்ஸ்நோரா இன்ரநாசனல்: எம்.பி.நிர்மல் அவர்களால் சென்னையில் நிறுவப்பட்ட இவ்வமைப்பு,மக்கள் முன்னேற்றம்கருதி உலகரீதியில் இயங்கும் தொண்டர் அமைப்பாகும்! சுகாதாரம்,சூழல்பாதுகாப்பு,இளைஞர்-மாணவர்-பெண்கள்-ஏழைகள் வளர்ச்சியில் கவனம்செலுத்துவது பாராட்டக்கூடியது.கொழும்பிலும் அண்மையில் தெருக்கூட்டி பலர்கவனத்தையும் கவர்ந்தவர்,நிர்மல்!சிந்தனை,சொல், செயலில் புதிய யுக்திகளால் புதியசமுதாயம்படைப்பதுதான் இங்குநோக்கு! சர்வதேசதமிழர் இவ்வமைப்புடன் நட்புறவு,ஒத்துழைப்பு,தகவல்பரிமாற்றம் மேற்கொள்ளும்

M.B.Nirmal,EXNORA INTL.
42,GIRIAPPA RD,T.Nagar,
Madras 600 017 India
tel.8283366,8283377

---

8.சிங்கப்பூர் இந்து-இதழ்:
Hindu Trust Fund
379,Serangoon road
Singapore

---

9.உலகத்தமிழர் குரல்:
64,Eaton avenue,
Toronto,ONT M4J 2Z5,
Canada

10.இந்தியன் எக்ஸ்பிரஸ்: இன்ரநெற்-இல் வாசித்து அறிய:(இந்தியதேர்தல்96: 27.04.96: முடிவுகள்)
http://express.indiaworld.com

---

11.இலக்கியநிகழ்ச்சிகள்: மதுரைக்கவிஞர் சு.இலக்குமணசுவாமி உலகநாடுகட்கு பயணம்செய்து கவியரங்கு,பட்டிமன்றம்,சொற்பொழிவு,கருத்தரங்கு நடாத்தவிரும்புகிறார். விரும்புவோர் தொடர்புறுக:tl.83293

kavisudarS.Lakumanasami
10-D,Seenivasa Nagar,
Thirunagar PO.Madurai
625006,Tamilnadu,India

---

12.இந்தியமதவிஞ்ஞானகழகம் 1992ல்,மதம்,விஞ்ஞானம் மூலம் இறை உண்மையை உணர ஆரம்பிக்கப்பட்டது.சுவாமிவிவேகானந்தர்,விஞ்ஞானி ஐன்ஸ்டைன்,தத்துவமேதை ஜே.கிருஷ்ணமூர்த்தி,பௌதீகபேராசிரியர் டேவிட் போம் ஆகியோர் கூற்றுப்படி, விஞ்ஞானஉண்மைகளை ஆதாரமாகக்கொண்டுஆராயப்படுகிறது.பலகருத்தரங்குகள்,மாநாடு,விழாக்கள்,இதழ் வெளியீடு நிகழ்த்தப்பட்டன.ஜே.கிருஷ்ணமூர்த்தி ஆய்வுமையத்தையும் கழகம் ஆரம்பித்துள்ளது.

"Religion starts,where science ends"

B.Sathyanarayanan,
Founder/Director,I.R.S.
1,Kamarajnagar 1st st.,
Cholaimedu,Madras600094

---

13.அஞ்சல்மூலம் தமிழ்கல்வி: தமிழ்தெரியா தமிழர்க்கும்,வெளிநாட்டவர்க்கும் தமிழில் எழுத,படிக்கஅஞ்சல்கல்விதொடங்கப்பட்டுள்ளது.ஒருவருடகாலப்பயிற்சிக்கு 600 அமெ.டாலர் கட்டணம்.செப்டம்பரில் ஆரம்பம். முன்பணம் 100 டாலர்.ஆடியோ மூலமும் பாடம் உண்டு.

S.Velmurugan,
10,Perumal kovil st.,
Muththiyalpettah,
Puthucheri,605003,India

---

14.உலகதமிழ்பண்பாட்டியக்கம்
Int.Mvt.fr.Tamilculture
PB.40306,Glenfield,
Auckland 10,Newzealand.

---

15.நோர்வே மனிதஉரிமை கழகம்:
Norwegian Inst.of Humanrights,Grensen 18, 0159 Oslo,Norway Tel.47 22.421360 Fax.22.422542
E.mail:admin@nihr.no



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனிப்பூக்கள்.

## காரையூரான்

"எத்தின பேரடி வெருட்டுவியள் என்ன? அப்பா வெருட்டிட்டார். அம்மா வெருட்டியாச்சு, இப்ப நீ வெருட்டுறியா? குலைக்கிற நாயோண்டும் கடிக்காது!" கூறிவிட்டு அனு தனதறைக்குள் கரைந்துவிட்டாள்.

சியாமிழி வெளியே வானத்தை வெறித்தாள். இந்தப்பிரச்சனைக்கும் வானத்தைப்போல முடிவேகிடையாதா? என்னும் ஆதங்கம் அவளுள் பிறந்தது.

அன்றிரவே தாயிடம் தான் அனுவோடு கதைத்ததையும், அதற்கு அனு அளித்த அலட்சியமான பதில்களையும், ஒன்றும் விடாமல் ஒப்பித்து விட்டாள். அன்னத்திற்கு வயிறு பற்றி எரிந்ததுடன் கைகள் பரபரத்தன. என்றாலும் எதுவுமே கையாலாகதவளாய் மனதிற்குள் புகைந்தவண்ணம் இருந்தாள். ஏதாவது செய்தால் இங்கேயே நாறிவிடும் என்பதால் பொறுமையை வரவழைத்துக்கொண்டு வேந்தனிடம் எல்லாவற்றையும் ஒப்பித்து விட்டாள்.

காலைபத்துமணி இருக்கும் வீட்டில் எல்லோரும் அவரவர் வேலைக்குச் சென்றிருந்தனர். சியாமிழியும் மதியச் சாப்பாட்டை செய்து முடித்துவிட்டு வெளியே போவதற்கு வேகமாய் வெளிக்கிடத் தொடங்கினாள்.

அந்த "றைசபீரோவில்" பிரயாண ஏற்பாடு செய்யும் இடத்தில் "உள்நாட்டு விமானமொன்று" பறந்துகொண்டிருந்தது. அழகிய மேசைகள், இரண்டு கொம்பியூற்றர், பூக்கன்றுகள், பல புத்தகங்கள், கால அட்டவணைகள், தொலைபேசிகள், இன்னும் ஏகப்பட்ட சாதனங்களனைத்தும் இரண்டு பெண்களின் ஆளுமைக்கே உள்பட்டதாய் இருந்தது.

அவர்களின் முகத்தில் புன்னகைப்பூ நிரந்தரமாகப் பூத்திருக்க வந்தவர்களை இன்முகத்துடன் அழைத்து வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தனர். சியாமிழி சற்றுக் காத்திருந்தபின்பு, ஒருபெண் வந்துகூறிய வட்சகு! என்னும் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவளாய் எழுந்துசென்று கதைத்தாள்.

அனு வீட்டுவேலைகளைச் செய்து முடித்துவிட்டு கோலுக்குள் வந்தபோது அங்கு எவரும் இல்லை. அம்மா அப்பா அக்கா மூவருமே அம்மா அப்பாவின் படுக்கையறைக்குள் இருந்தனர். ஏதாவது என்னைப்பற்றி இரகசிய ஆலோசனை நடத்துகிறார்களோ என்னவோ? என மனதிற்குள் எண்ணியவண்ணம் தொலைக் காட்சியைப் பார்க்கத் தொடங்கினாள். ஆனால் அவள் மனம் அதில் லயிக்காது தன்னைப்பற்றிக் குடையத் தொடங்கியது.

நான் என்ன செய்தேன்? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறேன்? எதுவுமே புரியவில்லையே? காதலிப்பது சரியா? சரியென்று நான் எண்ணுவது உண்மையானால் அதுவே திடமான எண்ணமா? அப்படித் திடமான எண்ணம் என்றால் நான் ஏன் திரும்பத் திரும்ப அதைப்பற்றி எண்ணுகிறேன்? நான் இங்கு தனித்திருக்க அவர்கள் அங்கு ஏதோ முக்கிய அலுவல்பற்றிப் பேசுகிறார்களே அது ஏன்?, எனது காதலால் வாழ்நாள் முழுவதும் நான் இப்படித் தனித்திருக்க வேண்டி வந்துவிடுமா? சகோதரங்கள், தந்தை, தாய், எல்லோரையும் பகைத்துக் கொண்டு வாழ்வதில்தான் சந்தோசம் காணமுடியுமா? அப்படிச் செய்வது சரியானதா? புரியவில்லையே? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே? புரிகின்ற வயது எனக்கின்னும் வரவில்லையா? அதனால்தான் எனக்கொன்றும் புரியவில்லையா? சீச் சீ..எங்கள் பரம்பரையில் யார் காதலைத்தான் இவர்கள் ஏற்றுக்கொண்டதுண்டு? காதலையே எதிரியாக நினைக்கிறார்களே? ஏன் என்பது எனக்கும் புரிவதில்லை. எதிர்க்கும் அவர்களுக்கும் புரியப் போவதில்லை. ஆனால் காதலை மூர்க்கமாய் எதிர்க்கிறார்கள். நான் எம்மையொவ்வாத ஒருவனைக் காதலித்ததால்தான் என்னை இப்படி எதிர்க்கிறார்களா? அப்படியென்றால் அக்கா முறைமாப்பிளையைக் காதலித்தபோது எதிர்த்தார்களே ஏன்?

இவர்களைப் பொறுத்தளவில் காதல் என்பது எதிரி. அது உண்மையிலேயே மனிதவாழ்க்கைக்கு எதிரியா? இல்லை. ஒருபோதும் இல்லை. காதல் என்பது இறைவனால் இயற்கையாக வழங்கப்பட்ட புனிதமான உணர்ச்சி. அதை இவர்களுக்கு மதிக்கத் தெரியவில்லை. வள்ளிமீது முருகன் கொண்ட காதலைமட்டும் இவர்கள் புனிதமானது என ஏற்றுக் கொள்வது காதலின் மேல் உள்ள மதிப்பால் அல்ல. கடவுள்மேல் கொண்ட பயத்தால்தான். அங்கு வள்ளி யார்? முருகன் யார்? இருந்தாலும் தெய்வக்காதல் எனப் போற்றுகிறார்கள். ஆனால் சாதாரண மனிதன் அப்படி ஒன்றைச் செய்து விட்டால் அதை அவமதிக்கிறார்கள். காலில் போட்டு மிதிக்கிறார்கள். இவர்களால் நிட்சயம் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதே உண்மை. ஆனாலும் காதல் புனிதமானது. அது யார்மீது எப்போது, எங்கே; வரும் என்பதை எவரும் கூறிவிட முடியாது. அப்படி உண்டாகும் காதலை மனிதன் தான் ஏற்படுத்திக் கொண்ட பிரிவுகளையும் பாகுபாடுகளையும் காட்டிப் பிரிப்பது எவ்வளவு கொடுமையானது? அதைத்தானே என் அப்பாவும் அம்மாவும் இப்போது செய்ய எண்ணுகிறார்கள்? அப்படியென்றால் நான் ஏன் கொடுமைக்குத் துணைபோகவேண்டும்? இல்லை. நான் ஒருபோதும் கொடுமைக்குத் துணைபோகப் போவதில்லை. ஸ்தீக்கையும் இந்த ஜென்மத்தில் மறக்கப் போவதில்லை.

இவளின் சிந்தனைச் சிறகை ஏதோ ஒரு அரவம் தீண்டி செயலிழக்கச் செய்தது. அனு நிமிர்ந்து பார்த்த போது சியாமிழி அனுவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

இந்தச் சிரிப்பிற்கு என்ன அர்த்தம்? ஏளனமா? அல்லது அனுதாபமா?, புரியாவிட்டாலும் ஒவ்வோர் சிரிப்பிற்கும் ஒவ்வோர் அர்த்தமுண்டு. அதுபோல் இதற்கும் ஏதோ அர்த்தமுண்டு என எண்ணிக் கொண்டாள்.

பத்துநாட்களாய் வீட்டில் எந்தச் சலசலப்பும் இல்லை. ஸ்தீக்குடன் கதைத்துவிட்டுப் பிந்தி வந்தாலும் ஏன் எதற்கென்று கேட்பாரில்லை. இவர்கள் என்காதலை அங்கீகரித்து விட்டனரா? மனிதனின் மென்மையான உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டனரா? இந்த மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியா? அல்லது இது ஒரு சதிக்கு அறிகுறியா? புயலுக்கு முன்வரும் அமைதியா? அல்லது பிரச்சனையின் முடிவாய் வரும் அமைதியா இது? எதுவுமே புரியாவிட்டாலும் சந்தோசமாய் இருந்தது. மனதிற்குள் இதமான ஆனந்தசுகம் நிறைந்திருந்தது. தன் விருப்பை அவமதிக்காத செய்கை பெருமகிழ்ச்சியைத் தந்தது. இத்தனையும் எண்ணிய அனுவுக்கு இந்த அமைதியின் ஆயுள் இன்னும்சில நாளுடன் முடிவடைவது தெரிந்திருக்கவில்லை.

அடுத்தநாள் பாடசாலைக்கு போகும்போது இதுவரைகாலமும் நிலவிய அமைதியும் உபசாரங்களும் நல்லதற்கல்ல! என்பதுபோல ஒருவித சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. இது எங்கள் காதலை எதிர்ப்பதற்கான முழுஅறிகுறியாகப் படவில்லை என எண்ணிக் கொண்டாள். எதற்கும் இன்று ஸ்தீக்குடன் இதைப்பற்றிக் கதைக்கவேண்டும் எனவும், அத்தோடு எலிசபெத்துடனும் கதைத்தால் எப்படி இதிலிருந்து தப்பிப்பது என்பதையும் முழுமையாக அறியலாம் எனவும், எண்ணியவண்ணம் பாடசாலைக்குச் சென்றாள்.

அன்று ஐந்தாவது பாடம் இல்லை. இப்படிப்பட்ட நேரங்களில் ஸ்தீக் அனு ஆகிய இருவரும் கொம்பியூற்றர் உள்ள அறைக்குச் சென்று அதில் நொஸ்க், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் படிப்பதுடன் சிலவிளையாட்டுக்களையும் விளையாடுவார்கள். சாதாரண விளையாட்டுடன் அவர்களின் மன்மதச் சேட்டைகளுக்கும் இந்த அறைமிகவும் உகந்ததாய் இருந்தது.

இன்று அந்த அறைக்குள் வேறுமாணவர்களைக் காணாதது இவர்களுக்கு மிகவும் வசதியாக இருந்தது. அறைக்குள் வந்ததும் இருவரும் ஒவ்வேறு இருக்கையில் தமது மேலங்கியை மாட்டிவிட்டு அனு ஒரு உலகப்படக் கணணியை எடுத்து செருகிக் கொண்டிருக்க; ஸ்திக் அவளின்பக்கத்தில் முட்டுக்காலிட்டு இருந்தவண்ணம் அவளைப் பார்த்துச் சிரித்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுவிற்கு அவன் விசமம் செய்யப் போகிறான் என்பது புரிந்தாலும் அவள் மனம் அதற்குக் கட்டாயம் தடைபோட வேண்டுமென எண்ணவில்லை. இந்த அனுமதிப்பு ஸ்தீக்கிற்கு உடம்பில் சூட்டைக் கூட்ட, அனுவின் மலர்முகத்தை ஏந்தி, தனதிதழை வண்டாக்கினான்.

சிலகணம் ஏற்றுக்கொண்ட மலர் பின்பு திடீரெனப் பின்வாங்கியது. சக்கரநாற்காலி சிலஅடி நகரவும் ஸ்தீக் குப்புற விழவும், அனு கவலைகளை மறந்தவளாய் உரக்கச் சிரித்தாள். சிறிதுநேரத்திலேயே அவள்முகம் இரத்தச் சிவப்புக் காட்டியதுடன் அவள் கண்களை நீர் திரையிட்டுக் கொண்டது. பின்பு இரக்கத்தை வரவழைத்துக் கொண்ட அனு...

"அடிபட்டுதா?"

"சீ.........றெம்ப சந்தோசமா இருக்கு.

"ஸ்தீக் நான் உங்களோட கதைக்கோனும். அதுதான் அப்பிடி........

அனு தனது இருப்பிடத்திற்கு மீண்டும்வர ஸ்தீக்கும் அவள் பக்கத்தில் வந்து செல்லமாய் அவள் தலையில் இரு குட்டுவைத்துவிட்டு,

"இப்பிடியா செய்யிறது?

"சொறி."

"ஏதோ விசயம் கதைக்கோனும் எண்டியே....என்ன விசயம்?"

"எனக்குப் பயமா இருக்கு ஸ்தீக். வீட்டில என்ன செய்யப் போயினம் எண்டு தெரியாது. ஆனா ஏதோ செய்யப் போயினம் எண்டது புரியுது. எப்பிடிஎண்ணினாலும் அவையின்ர பிடிக்க ஆப்பிடக்கூடாது."

"நாங்க என்ன செய்யேலும். இன்னும் பதினெட்டுமுடியல்லயே. அப்பா அம்மாவுக்கு கட்டுப்பட்டுத்தான் நாங்க நடக்கோனும். அதுவும் அப்பா அம்மாவின்ர எதிர்ப்போட எதுவும் செய்யேலாது? ஏதாவதெண்டா பொலிசிக்கு அடிச்சிடுவாங்க. இப்படி நிலைமைஇருக்க நாங்க என்ன செய்யேலும்?"

"ஏதாவது செய்யோனும் ஸ்தீக். இல்லாட்டி..............................!"

கண்களில் நீர் முட்டிக் கொள்ள, வார்த்தைகள் தொலைந்து போயின. சிறிது நேரம் நிலவிய மௌனத்தை கட்டுவது போல ஸ்தீக்,

"எங்கயாவது அனுப்பிடுவாங்க எண்டு பயப்பிர்றியா?"

"அப்படித்தான் செய்வாங்க எண்டு நினைக்கிறன்."

"அப்பிடிச் செய்தா எங்கள நிரந்தரமா பிரிச்சிடமுடியுமா?"

"நோர்வேக்க எண்டா அது சத்தியம் இல்லத்தான். ஆனா இலங்கேல எண்டா......?"

"நீ பயப்பிடத்தேவையில்ல உலகத்தில எந்தப்பகுதியா இருந்தாலும் நான் கைவிடமாட்டன்!"

"ஓ........ஸ்தீக். நீ நினைக்கிறமாதிரியில்ல இலங்க. அங்க எனக்கு கட்டாய கலியாணம் செய்து வைக்கலாம்."

"என்ன? அதெப்பிடி செய்வாங்க?"

"இங்கமாதிரி எல்லாச் சட்டங்களையும் மதிச்சு நடக்க மாட்டாங்க ஸ்தீக். காசக் குடுத்து கனவேல செய்திடுவாங்க. அங்க சர்வசாதரணமா கட்டாயக் கலியாணம் நடந்திடும்."

ஸ்தீக்கின் முகங்களை இழந்திருக்க, அவன் சிறிது நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தான். பின்பு திடீரென,

"எதுக்கும் இண்டைக்கு மம்மாவோட கதைப்பம்."

"ம்......................" என அனு இழுக்கவும் மணியோசை அமைதிக்கு சவால்விடவும் சரியாய் இருந்தது.

ஸ்தீக் வீட்டுக்குப் போவதை யாரேனும் பார்த்துவிட்டால் விடயம் மிகவும் சிக்கலாகிவிடும் என அனுவிற்கு மிகவும் பயமாக இருந்தது. அவனுடன் இன்று சென்றால்தான் எலிசபெத்துடன் கதைத்து ஏதாவது முடிவொன்றை தெரிந்து கொள்ளலாம் என்பதால் அவனுடன் கட்டாயம் செல்ல வேண்டியவளாயிருந்தாள். பலசிந்தனைகள் அவள் கவனத்தை குழப்ப பாடத்தில் கவனம் செல்லவில்லை. ஆசிரியர் கவனித்திருந்தும் கண்டிக்காது இருந்தாரோ என்பதும் அவளுக்குப் புரியவில்லை. இடையில் வகுப்பிலே எல்லோரும் சிரித்தது தெரிந்து. எதற்கென்பதை கவனிக்கத் தவறிவிட்டாள். அனுவுக்கு நினைவுகள் வகுப்பில் ஒன்றவில்லை. வயதில் குறைந்தவளாய் இருந்தாலும் தனது எதிர்காலத்தைச் சிந்திப்பதில் முழுமையாக ஈடுபட்டிருந்தாள். காலமும் இடமும் அவளுக்கு இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க, வாழ்க்கையைப்பற்றிச் சிந்தித்தாலே அமைதிபோய்விடும் என்கின்ற உண்மையை மனப்பாடம் செய்து கொண்டிருந்தாள். பாடத்தை பறக்கவிட்டாலும் காதலை தக்கவைப்பதற்காய் கல்லாய்ச் சமைந்தவளாய் அனு அங்கிருந்தாள்.

கல்லுக்குயிர்கொடுத்த ராமர் பாதமாய் கல்விநிலைய மணி ஒலிக்க, இந்தக்கல்லும் இயங்கும் எழில்கன்னியாகிக் கூட்டத்தில் கரைந்தாள். இவளோடு பக்கத்தில் ஸ்தீக்கும் தொடர்ந்து வந்ததைக் கூட கவனிக்கவில்லை.

வெளியே நடக்கத்தொடங்கிய அனு நிலத்தைக் கவனிக்க மறந்ததில் வியப்பென்றும் இல்லை. நிலத்தில் கொட்டியிருந்தபனி உருகி பின்உறைந்து பளிங்குபோல் இருந்தது. குளிர்காலப் பாதணி அணிந்தும் எங்கு; எப்போது வழுக்கும்! என்பதை எவரும் கூறமுடியாத நிலையில் அனு எதையும் கவனியாது, எந்த எச்சரிக்கையும் இல்லாது, தங்கள் காதல் விடயத்தில் சஞ்சரித்ததால் அவளின் கால்கள் தன்ஸ்ரத்திற்குச் சென்றது. பாடசாலைக் கதவைத் தாண்டி, நடுவீதியில் அதன் விளைவு அவளை அவமானத்திடம் கையளித்தது. இதைப்பார்த்துக் கொண்டு அவள் பின்னால்வந்த ஸ்தீக்கிற்கு சிரிப்பு அடங்காது திமிற அவன் ஒருவாறு கடிவாளம் போட்டுக் கொண்டான்.

அனு எழாது அப்படியே சிறிது நேரம் இருந்தாள். அவளால் சிரிக்க முடியாத அந்த நேரத்தில் அழவும் தோன்றவில்லை. அவள் மனம் "என்வாழ்க்கையில் நான் இப்படித்தான் வழுக்கிவிட்டேனோ" என எண்ணச் செய்தது. ஆனால் அது நீடிக்காது ஸ்தீக் கையைநீட்ட அதைப்பற்றியவண்ணம் எழுந்தாள். அவள் மனதில் இவன் இப்படி வாழ்க்கைபூராகவும் கைகொடுத்து உதவவேண்டும் என்கின்ற பிரார்த்தனை நிறைந்தது. எதுவும் பேசாதவளாய் அமைதியாக எழுந்து அவன் பின்னே நடந்து சென்றாள்.

எலிசபெத் தற்போது அலுவலகம் ஒன்றில் வேலைபார்த்துக் கொண்டிருந்தாள். இன்று இன்னும் வீட்டிற்கு வரவில்லை. ஸ்தீக் தன்னிடம் இருந்த சாவியால் கதவைத்திறந்து வீட்டிற்குள் பிரவேசித்தான். இருவரும் சமையல் அறைக்குள் செல்ல ஸ்தீக் கோப்பி தயாரித்தான். கோப்பியை வடியவிட்டுவிட்டு அனுவுக்குப் பக்கத்தில் வந்து இருந்தவனை,

"எங்கயம்மா?"

"இன்னும் வேலையால வரல்ல."

"வேலைக்கு போறாவா?"

"ம்.........போன கிழமையில இருந்து போற. இல்லாட்டி செலவுக்கு காசு போதாது."

இருவரும் கதைத்துக் கொண்டிருக்கும் போதே எலிசபெத் பிரசன்னமானாள். உள்ளே வந்த எலிசபெத் அனுவைக் கண்டவுடன்,

"காய் அனு!"

"காய்!"

"மத்தியான சாப்பாடு சாப்பிட்டியளா?"

"இல்ல மம்மா."

"கொஞ்சம் வெயிற் பண்ணுங்க! நான் சமைச்சிர்றன்!"

"நான் கோப்பி போட்டிருக்கிறன். அதமுதல்ல குடிக்கலாம். சாப்பாட்டவிட முக்கியமான பிரச்சன ஒண்டு கதைக்கோனும்!"

சாப்பாட்டு மேசையில் அமர்ந்த எலிசபெத் அனுவின் கையொன்றை எடுத்து வருடிக் கொடுத்தவண்ணம் ஸ்தீக்கைப் பார்த்து,

"அப்பிடி என்ன விசயம் கதைக்கோனும்?"

"நாங்க லவ்பண்ணுறது அனுவின்ர அம்மா அப்பாவுக்கு பிடிக்கல்லயாம். இரண்டு மூண்டுதடவை அனுவ வற்புறுத்தி என்னைக் காதலிக்க கூடாதுஎண்டு சொன்னாங்களாம். பிறகு ஒண்டும் கதைக்காட்டியும் அனு என்னோட பழகிறதெல்லாம் அவைக்குத் தெரியுமாம். ஆனா ஏனோ அவை அமைதியா இருக்கினம். இதைப்பாக்க அனுவுக்கு பயமா இருக்குதாம். சிலவேள சிலோனுக்கு திரும்ப கூட்டிக் கொண்டு போயிடுவினமோ எண்டு பயப்பிர்றாள் அனு. சிலோனுக்குப் போனா என்ன ? பதினெட்டு முடிய நீபோய் கலியாணம் செய்து கூட்டிட்டுவா!"

"நானும் அப்பிடித்தான் நினைச்சிருந்தன். அங்க நாங்க நினைக்கிற மாதிரியெல்லாம் இல்ல! றெம்பத் தில்லுமுல்லு பண்ணுவாங்களாம்! ஏதாவது..!

(வளரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ISSN:0805-7443 15,-Nkr
SARVADESA TAMILER
C-BLAD
Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Journalism(U.K.)
L.Hervigs vn.69A,3035 Drammen,Norway.
Tl./Fx.32.813416;E.mail:nsp@oslonett.no
*Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet .*

# ஆபிரிக்காவில் தோன்றிய மனித இனம் இடம் பெயர்ந்து ....!

நாற்பது முதல் ஐம்பது இலட்சம் வருடங்களுக்கு முன் ஆபிரிக்காவில்தான் மனித இனம் தோன்றியது. அங்கிருந்து நமது முன்னோர்கள் ஆசிய கண்டத்திற்கு குடிபெயர்ந்து இறுதியில் வடக்கு- தெற்கு நோக்கி அமெரிக்கா வரையும் பரவினார்கள்.

இந்த பாரிய குடி இடப் பெயர்ச்சியை 'பெரிய பயணம்' என மனித உடல் உள ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இப்போது, ஜப்பானிய ஆய்வுப் பயணிகளில் ஒருவரான யோஷிஹாரு சேக்கினோ, எந்தவழியில் நமது முன்னோர்கள் 'பெரிய பயணத்தை' மேற்கொண்டு வந்தார்களோ அதே பாதையில் சென்று ஆய்வு நடத்தி வருகிறார்.

இந்த ஆய்வு நோக்கத்திற்காக இவர் சுமார் 50,000க்கும் மேற்பட்ட கிலோ மீட்டர்கள் பயணம் செய்யவேண்டும்.

தென் அமெரிக்காவின் தென்பகுதி முனையில் தொடங்கி மனித இனத்தின் தொடக்க தொட்டிலாகக் கருதப்படும் மத்திய ஆபிரிக்கா வரை இப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

இப்பயணத்தின் ஒரு பகுதியை கால் நடை மூலமும் சில பகுதிகளை மிதிவண்டியிலும் வேறு சில பகுதிகளை படகுகளிலும் வேறு வித வாகனங்களிலும் மேற்கொள்கிறார். தென் அமெரிக்காவின் நவரினோ தீவிலுள்ள மொங்கோலிய இனவாசிகளின் சேமக் காலைகளிலிருந்து தான் இப்பெரிய பயணத்தை டிசம்பர் 1993இல் தொடங்கினார். இது வரை 7,000 கிலோ மீட்டர்கள் பயணம் செய்துள்ளார்.

அங்கிருந்து மெகலன் ஜலசந்தியைக் கடந்து சிலி நாட்டின் பனி உறையும் செங்குத்தான பட்டகோனியா மலைப் பகுதிகளைக் கடந்து பயணித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் அவர் பலத்த சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. குறிப்பாக சோனியா பகுதியில் உள்ள பனி மலைப்பகுதிகளைக் கடந்து வரும் போதுதான் மிலேச்சத்தனமான சவால்களை அவர் எதிர்நோக்கினார்.

சில நாள்களில் சுமார் 70 கிலோ கிராம் நிறை உடைய அவரது உணவு, உடை, ஆய்வுப் பொருள்களை சுமந்து செல்லுகையில் வேகமாக வீசும்பனிக் காற்றுத் தாக்குதல்களினால் அவர் மிகவும் சிரமப்பட்டார்.

இந்த நிலை சுமார் ஒரு மாதகாலம் தொடர்ந்திருந்தது. கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் உயரத்திற்கு மேல் பனிக்காற்று மிகக் குரூரமாக வீசி பனிப்பாறைகளைக் கூட ஆட்டி சிதைத்தன. ஒரு ஜெட் விமானம் பறக்கும்போது ஏற்படும் சத்தத்தைப் போன்று அது ஒலித்தது.

செக்கினோ இந்த வருட ஆரம்பத்தில் சிலதினங்கள் இளைப்பாறுவதற்கு ஜப்பான் வந்திருந்தார். டோக்கியோவில் அவரைச் சந்தித்துப் பேச ஆதரவாளரும் நண்பர்களும் கூடினார்கள்.

செக்கினோ உண்மையில் டோக்கியோவில்தான் பிறந்தார். ஹிட்டோட் சுபாஷி பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கல்வி பயின்றார். பல்கலைக்கழகத்திலேயே ஆய்வுப் பயண முயற்சிகளில் ஈடுபடும் ஒரு குழு ஒன்றை அமைத்துக் கொண்டார்.

இக்குழு 1971இல் அமேசன் நதியின் முழுப்பகுதியையும் அதாவது சுமார் 6000 கிலோ மீட்டர் தூரம் சுற்றி பிரயாணம் செய்தது.

அதன்பின் 29 தடவைகள் அமேசன் நதிப்பிராந்தியத்திற்குப் பயணம் செய்து நதி எங்கு தொடங்குகிறது. எங்கு முடிகிறது? அதன் பாதையின் தன்மை என்பவற்றை ஆராய்ந்தனர் அண்டீஸ், கயானா பகுதிலும் ஆய்வு பயணங்களை மேற்கொண்டார்.

மொத்தத்தில் தென் அமெரிக்காவில் மட்டும் ஒன்பது வருடங்களை இவ்விதம் ஆய்வுப் பயணங்களில் கழித்துள்ளார். தமது பயணங்களை விளக்கும் நூல்களையும் பட அல்பங்களையும் இவர் வெளியிட்டுள்ளார்.

தென் அமெரிக்காவில் பயணிக்கும் போது அவருடைய மொங்கோலியத் தோற்றம் காரணமாக தென் அமெரிக்க சுதேசி இனம் என்றே பலரும் தவறாக கருதினர்.


மொங்கோலியரின் மூதாதையர் எந்த நாட்டினர் என்பதை அறியும் பெரும் ஆர்வமும் மொங்கோலிய இனம் எங்கு தோன்றியது என்று அறியும் ஆர்வமும் ஆய்வுகளில் ஈடுபடுத்தியது. ஜப்பானிலும் தென் அமெரிக்காவிலும் வாழும் ஆதிக்குடிகளும் மொங்கோலிய இனத்தைச் சார்ந்தவர்களாவர்.

செக்கினோ ஒரு சாதாரண மனிதர் அல்ல. தமது ஆய்வுப் பயணங்களை இலகு ஆக்குவதற்காக யொக்கஹோமா நகர் பல்கலைக்கழகத்தின் மருத்துவக்கல்லூரியில் சேர்ந்த ஒரு வைத்தியர் ஆனார்.

இவ்விதம் ஆய்வுப்பயணங்கள் மேற்கொள்ளும் போது குறிப்பாக நாடுகளின் பின்தங்கிய ஒதுக்குப்புறமான பகுதிகளில் தான் பயணம் செய்ய நேரிடும்.

நான் பயணம் செய்யும் நாட்டு மக்கள் எனக்குக் காட்டும் கருணைக்குக் கைமாறு செய்வதற்காகவே மருத்துவம் கற்றுக்கொண்டேன்.

''மஞ்சள் இன மொங்கோலிய வர்க்கத்தின் ஆதி தொடக்கம் பின்னர் அவர்கள் எந்த எந்த வழிகளில் உலகெங்கும் பரவினார்கள் என்பதை கண்டு பிடிப்பது மட்டும் என்னுடைய நோக்கமல்ல. பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களிடமிருந்து அநேக விஷயங்களைக் கற்றுக் கொள்வதும் என்னுடைய பய




''நவீன மனிதன் இழந்து வரும் பல நல்ல அம்சங்களை மக்களிடமிருந்து தெரிந்து கொள்வது எனது நோக்கமாகும்'' என்றுகூறும் இவர் தனக்குப்பிடித்த ஒரு கிராமத்தில் சில நாள்கள் தங்கிவிடுவார். கிராம வாசிகளோடு பேசி அவர்கள் வாழ்க்கையை அவதானிப்பார்.

அவர்கள் சிந்தனைப் போக்கைப்பற்றி ஆய்வுகள் மேற்கொள்வார். வைத்தியராக இருப்பதால் அவர்களோடு உறவாடும் வாய்ப்பு அதிகம் கிடைக்கிறது.

**ஜோன்ரேஜிஸ்**

50000 கிலோ மீற்றர்களை கார், விமானம் என்பவற்றில் பயணம் செய்வது எளிது. ஆனால் மக்களுடன் மக்களாக உறவாடும் வாய்ப்பை இழந்துவிடுவீர்கள். மொங்கோலிய இனம் ஆதிதொடக்கத்தில் அனுபவித்து வந்த சிந்தனைப் போக்கை அவதானித்தல் அவசியம். என்கிறார்.

நன்றி :



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்